# எரிமலை

www.tamilarangam.net

கலை பண்பாட்டு சமூக அரசியல் ஏடு - வைகாசி 1992



## அன்னை பூபதி

உண்ணாவிரதத்திலிருந்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



எதிரிகளின் பாசறையை நோக்கிப் போகிறோம்

தமிழீழம் மண்ணை மீட்டெடுக்க ஓடிப்போகிறோம்



www.tamilarangam.net

# உள்ளே மலர்பவை



## வெளிரும் சாயம்

மிக மோசமான மனித உரிமைக் குற்றச் சாட்டுக்கு உள்ளான சிறீலங்கா அரசு, மனித உரிமை மீறல் குற்றச் சாட்டிற்கு உள்ளான பொலிஸ், இராணுவ அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் தன் மீதான அழுத்தங்களைக் குறைத்துக் கொள்ளவும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் முயன்றது.

..........06

## மௌனப் புயல்

அன்னையின் போராட்டம் உலகின் கண்களைத் திறந்து, இந்திய அரசின் அமைதி காப்புப் படலம் இங்கே எவ்வாறு நிகழ்கிறது என்பதைத் புலப்படுத்திவிடும் என மிரண்ட இந்திய இராணுவம், அன்னையின் போராட்டத்தை இருட்டடிப்புச் செய்வதற்கும், குழப்புவதற்கும் பல வழிகளிலும் முயன்றது. ஆனால் நடக்கவில்லை.

..........03






## மீட்பு

இராணுவம், தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் கிழக்கில்கூட, இராணுவ அணிகளை முழுமையாக அழித்துவிடும் சக்தி பெற்று விடுதலைப் புலிகள் விழங்குவது இராணுவ தரப்பில் பெரும் அச்சத்தையே ஏற்படுத்தியுள்ளது.

..........32

## உலக சமாதானம் ?

மேற்குலகம் தனது நலனுக்கு உகந்த முறையில் உலகில் "சமாதானத்தையும், ஸ்திரத் தன்மையையும், ஒழுங்கையும்" நிலை நாட்டும் முயற்சியில், ஐக்கிய நாடுகள் சபையை பயன்படுத்திவருவது கண்கூடு.



..........25

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதினோராம் ஆண்டு

வைகாசி 1992

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C. C. T - France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

www.tamilarangam.net

# சுதந்திரத்தோடு உறுதிப்படும் சமாதானம்

தமிழீழப் போராட்டம் நாளும் பலம் பெற்று வளர்ந்து வருவதோடு, நீதியான சமாதானம் நோக்கித் தனது நகர்வையும் நிகழ்த்தி வருகின்றது. பொருளாதாரத் தடை முறியடிக்கப்பட்டு வருகின்றது. சிறீலங்கா அரசாங்கத்தின் பாரிய இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தோல்வியுற வைக்கப்பட்டுள்ளன. தமிழீழ அரசு வெளிப்படும் பாதையில், தேவையான அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டுமானங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. தமிழீத்தின் சட்ட ஒழுங்கை நிலை நாட்ட நீதிமன்றங்கள், காவல் துறை, சிறை நிர்வாகம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. சிறீலங்கா அரசாங்கத்தினால் போலியாகப் புனையப்படும் சகஜ நிலை அல்ல; தமிழீழ அரசினால் தோற்றுவிக்கப்படும் சகஜநிலை தமிழீழப் பகுதிகளில் ஆங்காங்கே ஏற்பட்டு வருகின்றது. எதிர்ப்பாளர்கள், தமிழீழ பகுதிகளிலுள்ள , சமூக, பொருளாதார, அரசியல் குறைபாடுகளை சுதந்திர நாடுகளுடன் ஒப்பிட்டுச் சாடும் அளவுக்கு நிலைமை மாறி வருகின்றது. இந்தியாவிலுள்ள சில சக்திகள், விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்து, சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்த எடுக்கும் முயற்சிகளையும், தடைகளையும் உடைத்துக்கொண்டு இப்போக்கு வளர்ந்துவருகின்றது.


இதேவேளை, சிறீலங்காவிலுள்ள நிலைமைகளைப் பார்த்தால் மிகவும் பரிதாபகரமாக உள்ளது. அரச பயங்கரவாதம், கொடூர அடக்குமுறை, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், களவு, கொள்ளை, கொலைகள், சகல மட்டங்களிலும் ஊழல் என்ற வகையில் நிலைமை மோசமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல ஆகியோரும், பல்வேறு உள்ளூர், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் பிரேமதாசா அரசாங்கத்தின் மனிதப் படுகொலைகளை பிட்டுக் காட்டிவருவது, அரசாங்கத்திற்குப் பெரும் சங்கடத்தைச் சர்வதேச ரீதியில் ஏற்படுத்தி, வெளிநாட்டு உதவிகளுக்கும் ஆப்பு வைக்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. தோல்விகளுக்கு மத்தியிலும், மக்கள் மீது போரைத் தொடர்ந்து திணித்து, மக்களின் கவனத்தை அதன் பக்கம் திருப்பினால் ஒழிய, அரசாங்கம் சிலநாள்கூட நின்று நிலைக்காது என்ற நிலை காணப்படுகின்றது.

இத்தகு சந்தர்ப்பத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான அரசியல் நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது. தென்பகுதியில் இருந்து கிறிஸ்தவ ஆயர்கள், பௌத்த பிக்குகள் ஆகிய மதக்குழுக்கள் யாழ்ப்பாணத்திற்கு அழைக்கப்பட்டு, தமிழ் மக்களின் அபிலாஷைகளும், சமாதானத் தீர்வு காணும் வழிமுறைகளும் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அமைச்சர் தொண்டமான், பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆகியவும் தமிழீழ மண்ணுக்கு அழைக்கப்பட்டு, சிறீலங்கா அரசாங்கத்தின் போர் நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ள அழிவுகள் சுட்டிக்காட்டப்படவுள்ளன. உள்நாட்டில், விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்குச் சமனான முறையில், விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயற்பாடுகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. பல்வேறு நாட்டு அரசாங்கங்களும், பல்நாட்டு நிறுவனங்களும், தமிழ்த் தேசியப் பிரச்சனையின் தீர்வுக்கு மத்தியஸ்தம் வகிக்க அழைக்கப்பட்டுள்ளன.

தமிழீழப் பகுதிகளில் நிலைமை ஸ்திரமடைந்து, சுதந்திரமும், சமாதானமும் உறுதிப்பட்டு வருமானால், குழப்ப நிலையிலுள்ள சிறீலங்கா அரசு, தனது தனித்த இருப்பை உறுதிப்படுத்த, தமிழீழத் தேசத்தின் ஒத்துழைப்பைக் கோரும் நிலை ஏற்படினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்னை பூபதி

அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் தொழிலாளர்கள் ஒன்றுகூடி, தொழிலாளர் வேலைசெய்யும் நேரம் எட்டு மணித்தியாலங்களாகக் குறைக்கப்பட வேண்டும் என்று முதலாளிகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். இதில் தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி, உயிர்த்தியாகம் செய்து கோரிக்கையை வென்றெடுத்த தினமே தொழிலாளர் தினமாக உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களின் வேலை நேரம் எட்டு மணித்தியாலங்களாகக் குறைக்கப்பட்டதோடு தொழிலாளர்கள் பிரச்சனைகள் தீர்ந்துவிடவில்லை. சுரண்டும் வர்க்கம் வெவ்வேறு வழிகளில் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறது.

சுரண்டலின் உச்சக்கட்டமாக ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளை மிகவும் கொடூரமான முறைகளில் பல வழிகளிலும் சுரண்டுவதுடன், அங்கேயுள்ள தேசிய இனங்களிடையே திட்டமிட்ட ரீதியில் விரிசல்களை ஏற்படுத்தி தொழிலாளர்களிடையே பிரிவினையை வளர்த்திருக்கிறது.

இனவேறுபாடு, மொழிவேறுபாடு, மதவேறுபாடு, பிரதேசவேறுபாடு காரணமாக ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை ஒடுக்குவதற்கு மூலகாரணமாய் இருப்பதும் ஏகாதிபத்தியமே. மேதினம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களினது தினமாகவே உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் தமிழ் பேசும் மக்களுக்காக உயிர்த் தியாகம் செய்த அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூருதல் பொருத்தமாகும்.

சிறீலங்கா இனவாத அரசால் ஒடுக்கப்படுகின்ற தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையைக் காப்போம், சுதந்திரத்தை நிலைநாட்டுவோம் என்று புறப்பட்ட இயக்கங்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர ஏனையவை சுவடுகள் தெரியாமல் அழிந்துபோயின; சில ஏகாதிபத்தியத்தால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டன.

இந்நிலையில் பிரஜைகள் குழுக்கள் போன்ற மக்கள் ஸ்தாபனங்கள், இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தன.
தொழிலாளர் சங்கங்களும், மாதர் சங்கங்களும், மாணவர் சங்கங்களும் இணைந்து அரசிற்கு எதிரான பல உண்ணாவிரதப் போராட்டங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் போன்ற வெகுஜனப் போராட்டங்களை நடத்தின.
இச்சமயம் அன்னையர் முன்னணி, மிதவாத அரசியல் நிலையை கடைப்பிடிக்கும் ஒரு சுயாதீன அணியாக நின்று போராட்டங்களை நடத்தியது.

இவ்வமைப்பு தமிழ் மக் களின் எல்லையில்லா நலன் கருதி எமது பிரச்சனை சம்பந்தமாக நிரந்தரமான தீர்வை, ஒரு புரட்சிகரமான தீர்வை முன்வைக்கவில்லை.

இவர்கள் முன்வைத்த நிபந்தனையற்ற யுத்தநிறுத்தத்தை அரசு கடைப்பிடிக்கவேண்டும். பேச்சுவார்த்தைமூலம் அமைதித்தீர்வு காணப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஒரு தற்காலிகமான அமைதியையும், நிம்மதியையும் ஏற்படுத்தக்கூடியனவாகவே இருந்தன -தவிர, நீண்டகாலப் போக்கில் தமிழ்மக்களின் சுதந்திரத்தையும், இறைமையையும் காக்கக்கூடியதாக இருக்கவில்லை. இருப்பினும், மட்டக்களப்பு அன்னையர் முன்னணிபோன்றவை நமது போராட்டத்தில் தீவிரத் தன்மையைக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

1987 யூலை 29 - இல் இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம் செய்துகொண்டபின், தமிழீழத்தில், அரசியல், இராணுவ நிலைகளில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது.
இந்தியா தன்னை ஒரு சமாதானப் பிரியனாகக் காட்டிக்கொண்டு சதிசெய்யப் புறப்பட்டு வந்தது.

இந்தியாவின் இத்துரோகத்தனத்தை தோலுரித்துக்காட்டும் அவசியம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்சந்தர்பத்தில் விடுதலைப் புலிகள் அகிம் சைப் போராட்டத்தை தமது ஆயுதமாக்கிக்

கொண்டனர். இதில் முதலாவது சத்தியாக்கிர கியாக திலீபன் தன்னைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

ஆகாரமோ, நீரோ அருந்தாது தனது சாகும் வரை உண்ணாவிரதத்தை நல்லூர் முன்றலில்




அன்னை பூபதி: அகிம்சைப்போர் ஆரம்பம்.

ஆரம்பித்தான் திலீபன். தொடர்ந்து திருகோ ணமலையில் கிருபாவும், மட்டக்களப்பில் மத னும், முல்லைத்தீவில் திருச்செல்வமும் விடு தலைப் பிலிகளின் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர்.

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் -மக்களுக்காக மரணிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்" என் றான் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட திலீ பன்.

விடுதலைப் புலிகள் நடாத்திய இந்தப் போராட் டம் இந்திய ஏகாதிபத்தியத்தாலும் அடக்கப்பட் டுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனின் நெஞ்சிலும், விடுதலைத் தீயை மூட்டி விட்டது.

மேற்கண்ட இந்திய இலங்கை கூட்டுச்சதியை எதிர்த்துப் பொதுமக்களும் பல இடங்களில் உண் ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் இந்தியா அனைத்துத் தமிழ்ப் பேசும் மக்களுக்கும் பாரிய துரோகம் இழைத்துவிட் டது. உண்ணாவிரதமிருந்த திலீபன் சாகவிடப் பட்டான்.

மீண்டும் ஆயுதப் போர் தவிர்க்க முடியாததாகி யது. அமைதி காக்கவென்று கூறிக்கொண்டு காலடி எடுத்து வைத்த இந்திய இராணுவம் கனிகளையும், காய்களையும், பிஞ்சுகளையும் கசக்கிப்போட்டது. ஆம்; ஏராளமான தமிழ் பேசும் மக்களைக் கொன்றுகுவித்தது.

இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்களை உயிராபத் திலிருந்து காப்பதற்காக நிரந்தர யுத்த நிறுத் தத்தை இந்திய அரசு கடைப்பிடிக்க வேண்டு மென்று சகல பொதுமக்கள் அமைப்புகளும் ஒருமித்துக் கொடிபிடித் தன.

ஆனால், இந்திய அர சுக்கு இவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது.

இந்திய அரசின் இந்தப் பிடிவாதப் போக்கை உறுதியாக எதிர் கொண்ட அன்னையர் முன்னணி, இந்திய அரசின் போக்கில் மாற் றத்தைக் கொண்டுவரத் தமது உயிரையே பணயம் வைக்கத் தலைப்பட்டது. இந்த வேளையில்தான் அன் னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளைவர் கள், பல இலட்சக்க ணக்கான தமிழ் பேசும் மக்களை ஆதிக்க வெறியர்களின் துப்பாக்கிக் குண்டிலிருந்தும், பீரங்கிக் குண்டிலிருந்தும் காப்பதற்காகத் தன்னு யிரை அழித்துக்கொள்ளத் திடசங்கற்பம் பூண் டார்.

அன்னையர் திலகம் 19-03-1988ல் தனது பிறந்த இடமான மட்டக்களப்பிலேயே தமது உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

மகிழ்ச்சியோடு போராட்டத்தில் இறங்கினார். - சாதாரண குடும்ப உறவு, பாசவலைகள் அத் தனைக்கும் அப்பாற்பட்டு அனைத்துத் தமிழ்பே சும் மக்களினதும்மேல் கொண்ட நேசத்தினால் தன்னுயிரைத் தியாகம் செய்யத் தலைப்பட்டார்.

அன்னையின் வீரமும், உறுதியும், மிக்க போராட்டம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுச்சியலையை ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், அடையாள உண்ணாவிரதங் களும் ஆங்காங்கே நடைபெற்றன. (அந்நியரின் அச்சுறுத்தலின் மத்தியிலும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நிலையில் அன்னையின் போராட்டம் உலகின் கண்களைத் திறந்து இந்திய அரசின் அமைதி காப்புப் படலம், இங்கே எவ்வாறு நிகழ்கிறது என்பதைப் புலப்படுத்திவிடும் என மிரண்ட இந்திய இராணுவம், அன்னையின் உறுதி தளராத போராட்டத்தை இருட்டடிப்புச் செய்வதற்கும், குழப்புவதற்கும் பல வழிகளிலும் முயன்றது. ஆனால் நடக்கவில்லை. தனது கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டத்தைக் கைவிட அன்னை மறுத்துவிட்டார்.

ஆனால் இந்திய அரசின் போக்கில் மாற்றமில்லை. அன்னையின் போராட்டம் தொடங்கி முப்பது நாட்களில் அவரின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாக இந்திய அரசின் மமதைக்கு இரையானது.

நாற்பது வருடகால விடுதலைப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த வீரம் செறிந்த குடும்பப் பெண்ணாவார் அன்னையர் திலகம்.

உலகிலேயே உண்ணாவிரதமிருந்து வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட முதற் பெண்மணியும் இவரே.

அன்னையின் விடுதலை வேட்கையும், தியாகமும் தமிழீழ விடுதலைக்கான மக்கள் போராட்டத்தில் என்றும் இல்லாத எழுச்சி நிலையை உலகிற்குக் காட்டிநிற்கின்றது.

அன்னையின் தியாகவேள்வி முடிவடைந்து இப்போது நான்கு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. தன்னுடைய உன்னத தியாகத்தால் தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களில் ஒளிரும் கனலாகவே அவர் நிலைத்துவிட்டார். ■



# சத்தியஜித் ரே

## திரை உலகின் யுக புருஷன்.

சத்தியஜித் ரே, உலகின் முதல்தர திரைப்பட மேதை; தனது 70வது வயதில், சித்திரை, 23 ம் திகதியன்று காலமானார். கடந்த மாதமே சர்வதேச கௌரவ விருது (Honorary Academy Award) திரைப்படத் துறையில் அவரது சேவையைப் பாராட்டிக் கொடுக்கப்பட்டது. அவர் தயாரித்த படங்களுள் ஒன்றைத் தவிர மற்றதனைத்தும் வங்காள மொழியிலானவை. அபு என்பவனின் குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் ஆகியவற்றைச் சித்தரிக்கும் தொடர் வரிசைப் படங்களில், வீதியின் பாடல் எனப்படும் "பதர் பாஞ்சாலி", 1956ம் ஆண்டு பிரான்சில், கான் நகரில் நடந்த திரைப்பட விழாவில் சர்வதேச விருதினையும், ஏனைய பதினைந்து விருதுகளையும் பெற்றது. உலகில் இதுவரை உருவான சிறந்த திரைப் படங்களுள் ஒன்றாக இது கருதப்படுகின்றது.

இவருடைய ஏனைய படங்களும் பல சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளன. இவர் திரைப்பட இயக்குநராக மட்டுமல்ல, படத் தயாரிப்பாளராகவும், வசன கர்த்தாவாகவும், இசை அமைப்பாளராகவும், ஒளிப்பதிவாளராகவும் தனது படங்களுக்குச் செயற்பட்டவர்.

பிரச்சனைகளிலிருந்து தப்பி ஓடவைக்கும், மசாலாப் படங்களிலிருந்து அவருடையவை வேறுபட்டதாக இருந்தன. காதலும், சண்டையும், கூத்தும், கும்மாளமுமே திரைப்படமென வர்த்தக மயமாக்கப்பட்ட இந்தியத் திரைப்படத் துறையில் இவருடைய படங்கள் வித்தியாசமாகப் பரிமணமித்தன. பழைமைக்கும், புதுமைக்குமான முரண்பாடுகள், விரைவான சமூக, பொருளாதார மாற்றங்கள் தனிமனிதனில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த வெளிப்பாடாக அவரின் கதைக் கருக்கள் அமைந்தன. அனைத்துக்கும் மேலாக அவரது திரைப்படங்களில் மெல்லிய மனித உணர்வுகள் ஊடுருவியிருந்ததோடு, மிக சாதுரியமாக கலை வெளிப்படவும் செய்தன. ஒரு விமர்சகர் குறிப்பிடுவது போல், "அவரது படங்கள் மிக அடக்கமான முறையில் முழு உலகையே வெளிப்படுத்தின."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறிலங்கா vs உடுகம்பொல

## அம்பலமாகும் மனித உரிமை மீறல்கள்

- திலீபன் -

மனித உரிமை மீறல்களுக்கும் சிறீலங்கா அரசாங்கங்களிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருவது 'சுதந்திர' இலங்கையின் வரலாற்றில் தெளிவாகப் பதியப்பட்டுள்ளது. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்த் தேசிய இனத்திற்கெதிராக சிறீலங்கா அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகளையும் மனித உரிமை மீறல்களையும் மனித குல வரலாறு மிகுந்த அவமானத்துடன் உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது.

1987-1989 ம் ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் 60,000 க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் J. V. P ஒழிப்பு என்ற பெயரில் கொன்றொழிக்கப்பட்ட நிகழ்வும் இடம் பெற்றவுடன் சிறீலங்கா அரசின் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு புதிய பரிமாணத்துடன் உலக அரங்கில் எழுந்தது.

இப்படுகொலைகளும், 1990 ம் ஆண்டு ஆனி மாதம் 11 திகதி விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையேயான முரண்பாடு யுத்தமாக வெடித்தபின், அரச படைகளால் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடூரமான தாக்குதல்களும் இணைந்து உலக அரங்கில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அரசுகளில் முதன்மை இடத்தினை சிறீலங்கா அரசிற்குப் பெற்றுக் கொடுத்தது.

### சர்வதேச ரீதியிலான கண்டனம்

சிறீலங்கா அரசின் இவ் மனித உரிமை மீறல்களுக்கான கண்டனங்கள் சர்வதேச அரங்கில் பரவலாக எழுந்தன. பல்வேறு மனித உரிமை அமைப்புக்களும் அரசாங்கங்களும் சிறீலங்காஅரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கடும் கண்டனங்களை முன்வைத்தன. சிறீலங்காவிற்கான வெளிநாட்டுதவியும் மனித உரிமை மீறல்களுடன் இணைக்கப்படக் கூடிய நிலைமைகள் தோற்றம் பெற்றன. சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்படாவிடின் சிறீலங்காவிற்கான உதவிகளை நிறுத்த வேண்டியளவிற்கு உதவி செய்யும் நாடுகளும் அழுத்தங்களுக்கு உள்ளாயின. இதனால், தொடர்ந்து சிறீலங்கா அரசாங்கத்திற்கு உதவி செய்வதானால் சிறீலங்கா அரசு மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது என்ற கருத்து சர்வதேச அரங்கில் மேலெழும்ப வேண்டும் என உதவிசெய்யும் நாடுகள் விரும்பின. இதன் அடிப்படையில் உதவிவழங்கும் நாடுகளிடமிருந்தும் சிறீலங்கா அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

### சிறீலங்கா அரசின் நடவடிக்கை

மனித உரிமை மீறல்கள் இடம் பெறவில்லை எனக்கூறி நிராகரித்துவிட முடியாதளவிற்கு சிறீலங்கா அரசின் மனித

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமை மீறல்களுக்கான ஆதாரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தமையால் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உரிய நடடிக்கை எடுத்து வருவதாகக் காட்டவேண்டிய தேவை சிறீலங்கா அரசிற்கு ஏற்பட்டது. இதனால் மனித உரிமைகளைப் பேணுவதற்கான 'நடவடிக்கைகளை' எடுக்கும் செயற்பாட்டை சிறீலங்கா அரசு ஆரம்பித்தது.

1992ம் ஆண்டு மாசி மாதம் 7ம் திகதி சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிசில் நடைபெற இருந்தமையால் அதற்கு முன்னர் சிறீலங்கா அரசு வேகமாகச் செயற்பட்டது. சிறீலங்கா அரசால், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை நிவர்த்தி செய்வதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1) 1991ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 1991ம் ஆண்டு புரட்டாதி மாதம் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் சிறீலங்கா அரசிற்கு வழங்கப்பட்ட 32 சிபாரிசுகளில் 28 சிபாரிசுகள் முழுமையாக ஏற்கப்பட்டன. மூன்று சிபாரிசுகளுக்கான நடவடிக்கைகள் ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், ஒரு சிபாரிசினை நடைமுறைப்படுத்த முடியாமைக்கான காரணமும் அமைச்சரவையினால் வெளியிடப்பட்டது.

2) 1992ம் ஆண்டு தை 30 ம் திகதி கொக்கட்டிச்சோலை படுகொலைகளுக்கானா விசாரணையில் ஈடுபட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, கொக்கட்டிச் சோலையில் 67 பேர் கொல்லப்பட்டதற்கு இராணுவமே பொறுப்பு என அவசர இடைக்கால அறிக்கையின் மூலம் வெளியிட்டது. (கொக்கட்டிச்சோலைச் சம்பவத்தில் 160 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருந்தனர். மேலும் இவ் அறிக்கை பல குறைபாடுகளைக் கொண்டிருந்தது. இது குறித்து இங்கு விரிவாக ஆராயவில்லை.)

3) 1992, தை மாத இறுதிப்பகுதியில் 25 பக்கங்களைக் கொண்ட 'HUMAN RIGHTS IN SRILANKA-STATUS REPORT' எனப் பெயர்கொண்ட அறிக்கை சிறீலங்கா அரசால் வெளியிடப்பட்டது.

இவ் அறிக்கையில் மனித உரிமைகள் தொடர்பாக சிறீலங்கா அரசின்மீதான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கப்பட்டிருப்பதுடன், மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகிய இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் வேலையிலிருந்து இளைப்பாற நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந் நடவடிக்கைகளை நோக்கும்போது, சிறீலங்கா அரசின் அரசியல் உயர் பீடத்திற்கும் மனித உரிமை மீறல்களுக்கும் தொடர்பில்லை எனவும் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அரசியல் உயர்பீடம் நடவடிக்கையினை எடுத்து வருவதாகவும் ஒரு மாயையினை சிறிலங்கா அரசு தோற்றுவித்தது புலனாகும். இம் மாயை சகலராலும் புரிந்து கொள்ளப்படக் கூடியதாயினும் நலன்களின் அடிப்படையில் உதவி வழங்கும் நாடுகளும் (முக்கியமா அமெரிக்கா, ஜப்பான்) மனித உரிமை விடயத்தில் முன்னேற்றம் காணப்படுவதாகவும், உதவியினை நிறுத்துவது மனித உரிமைகளை பேணுவதற்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை என்ற கருத்தினையும் முன்வைத்து இவ் வருடமும் 825 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை சிறீலங்கா அரசிற்கு வழங்கின.

## சிறீலங்கா அரசு எதிர் உடுகம்பொல

இந் நிலையில், சிறீலங்கா அரசால் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல, சிறீலங்கா அரசுக்கெதிராக போர்க் கொடி தூக்கி வெளியிட்ட அறிக்கை அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

> "கறுப்புப் பூனைகளின் நடவடிக்கைகளுக்கு என்னை ஒரு வசதியான திரைமறைவாகப் பயன்படுத்தியுள்ளனர்"
>
> - உடுகம்பொல -



உடுகம்பொல 1987 - 1989 காலப் பகுதியில், சிறீலங்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசின் J.V.P ஒழிப்பு நடவடிக்கையின் முக்கிய பங்கேற்று கொடூரமானவர் எனப் பெயர் எடுத்தவர். தங்களுக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸ், இராணுவ அதிகாரிகளின் குடும்பங்களையும் J.V.P யினர் பழிவாங்கிக் கொண்டிருந்தமையால் தனது மனைவியையும், பிள்ளைகளையும் அமெரிக்காவிற்கு அனுப்பி விட்டு J.V.P க்கு எதிரான நடவடிக்கைகளை நேரடியாக மேற்கொண்டவர். (இவரின் மனைவி அமெரிக்காவின் சிறீ லங்காத் தூதராலய ஊழியராகவும், பிள்ளைகள் மாணவர்களாகவும் அமெரிக்காவில் இருந்தனர். இவர்களின் வதிவிட நீடிப்புக் கோரிக்கையினை அமெரிக்க அரசு நிராகரித்தமையால் தற்போது அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.)

இவர் செயற்பட்ட பகுதிகளில் J.V.P க்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்றது மட்டுமின்றி, 'கறுப்புப் பூனைகள்', 'பச்சைப் புலிகள்' போன்ற விழிப்புக் குழுக்களாலும் பலர் கொல்லப்பட்டனர். மனித உரிமை விடயத்தில் இவரது பெயர் 'பிரபல்யம்' பெற்று விளங்கியது.

கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட உடுகம்பொல J.V.P யின் சட்டத்தரணியாகச் செயற்பட்டு வந்த லியனராச்சியின் கொலை தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவர் நீதிமன்றம் முன்னாலோ அல்லது C.I.D காரியாலயத்திலோ சித்திரை ஆறாம் திகதிக்கு முன்னர் ஆஜராக வேண்டுமெனவும், இவர் வெளிநாடு செல்வதனைத் தடுப்பதற்காக இவரது கடவுச்சீட்டு (PASS PORT) பறிமுதல் செய்யப்பட வேண்டுமெனவும் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் உடுகம்பொல தலைமறைவாகினார். அவர் எங்கிருக்கிறார் என்ற விபரம் கூடத் தெரியாத நிலையில், அவர் வெளியிட்ட அறிக்கை கொழும்புப் பத்திரிகைகளில் வெளியாகியது. இவ்வறிக்கையில் சிறீலங்கா அரசால் வெளியிடப்பட்ட 'HUMAN RIGHTS IN SRILANKA-STATUS REPORT' என்னும் அறிக்கையில் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு உடுகம்பொல பதிலளித்துள்ளார்.

"கறுப்புப்பூனைகள் என்ற கொலைஞர் அணியை நடத்தி வந்தவர்களும் ஐ.தே.க அரசியல் வாதிகளும் கறுப்புப் பூனைகளின் நடவடிக்கைக்கு என்னை ஒரு வசதியான திரைமறைவாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

குற்றச் செயல்களுக்காக என் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஐ.தே. கட்சி அரசியல் வாதிகளே பொறுப்பாளிகள் ஆவர்" என இவ்வறிக்கையில் உடுகம்பொல குறிப்பிட்டதோடு, 1987 ஆடி முதல் கார்த்திகை வரை 830 பேர் கொலை செய்யப்பட்டதனை நிருபிக்கக்கூடிய பட்டியல் தம்மிடம் உள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

உடுகம்பொலவின் இவ் அறிக்கை J.V.P ஒழிப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைக்கும் அரசியல் பலிவாங்கல்களுக்கும் விழிப்புக் குழுக்களின் செயற்பாடுகளுக்கும் ஆளும் ஐ.தே. கட்சியின் அரசியல் பீடத்திற்கும் தொடர்பு உள்ளது என்பதனை வெளிப்படுத்தியது. மேலும் இப்படுகொலைகளைத் தான் எதிர்த்ததாகவும், படுகொலைகள் தொடர்பாக சாட்சியங்கள் வைத்து விசாரணை நடத்தப்படுமானல் தான் நிச்சயமாக உதவுவேன் எனவும் உடுகம்பொல அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சிகள் உற்சாகம்

இவரது இவ் அறிக்கை வெளிவந்ததும் எதிர்கட்சிகள் சுறு சுறுப் படையத் தொடங்கின. ஏற்கனவே ஜனதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக பதவி விலகல் மனு கொண்டு வந்து அது 'தோல்வியில்' முடிவடைந்தமையினைத் தொடர்ந்து அரசுக்குத் தொல்லை கொடுக்கச் சந்தர்ப்பம் பார்த்திருந்த எதிர்க் கட்சிகள் உடுகம்பொலவின் அறிக்கையினைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டன.

"உடுகம்பொலவின் அறிக்கை மீது விசாரணை நடாத்த உயர் நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் குழு அமைக்க வேண்டும்"

**சிறீமாவோ பண்டாரநாயக்கா**



"உடுகம்பொல விடுத்திருக்கும் பகிரங்க அறிக்கை நாட்டில் இடம்பெற்ற தொடர்ச்சியான பல கொலைகளில் அரசு கட்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யின் உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்தின் ஏஜெண்டுகளுக்கும் இருக்கும் உடந்தையினை அம்பலப் படுத்துகின்றது. இந்தக் கொலைகள் தொடர்பாக எந்தவிதமான விசாரணையோ அல்லது கேலிக்கிடமான விசாரணை தானுமோ இதுவரை நடாத்தப்படவில்லை" எனக் குறிப்பிட்ட எதிர்க் கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா உடுகம்பொலவின் அறிக்கை தொடர்பாக விசாரணை நடாத்த ஓய்வு பெற்ற உயர் நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இக்கோரிக்கையினை எதிர்க்கட்சிகளும் ஆமோதித்துள்ள அதேவேளை "ஆணைக் குழுவுக்கு உயர் நீதிமன்ற நீதிபதிகளை ஜனாதிபதியே நியமிக்கிறார் எனவே இந்த ஆணைக்குழுவில் சர்வதேச ஜீரர்கள் அமைப்பு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மனித உரிமைகள் சங்கம் ஆகியவற்றின் பிரதி நிதிகள் இடம் பெறவேண்டும்" என காமினி திசநாயக்கா கூறியுள்ளார்.


## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

உடுகம்பொல வெளியிட்டிருக்கும் தகவடல்களின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவிருப்பதாகவும் இதற்கான முன்னறிவித்தல் ஏப்ரல் 21 ஆம் திகதி சபாநாயகரிடம் வழங்கப்படும் என எதிரணிக் கட்சிகள் கூட்டிய பத்திரிகை மகாநாட்டில் சிறிமாவோ பண்டார நாயக்க அறிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ் கட்சி, சம சமாஜக் கட்சி நவசமசமாஜக் கட்சி ஆகிய கட்சிகள் இப் பத்திரிகையாளர் மகாநாட்டில் கலந்து கொண்டன.

"விசாரணை ஆணைக் குழுவில் சர்வதேச அமைப்புக்களும் இடம் பெறவேண்டும்"

- காமினி திசாநாயக்கா -



## உடுகம்பொலவுக்கு உயிர் ஆபத்து.

இதற்கிடையில், ஏப்ரல் ஆறும் திகதி நீதி மன்றத்ல் முன்னிலோ அல்லது CID யின் முன்னிலோ உடுகம்பொல ஆஜராவார் என எதிர் பார்க்கப்பட்ட போதும் (தான் நீதி மன்ற கட்டளையினை மதித்து ஆஜராகப் போவதாக உடுகம்பொல முன்னர் அறிவித்திருந்தார்.) இக் கட்டுரை எழுதிய நேரம் வரை அவர் ஆஜராகவில்லை.

மாறாக எதிர்க் கட்சி தலைவி சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கு உடுகம்பொல கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளதாகவும் இக்கடிதத்தில் தனக்கு உயிராபத்து விளைவிக்கத் திட்டமிடப் படுவதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் தான் அறிவதாகவும் தனது பாது காப்பை உறுதிப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உடுகம்பொல கோரியுள்ளதாகக் கூறி உடுகம்பொலவினால் எழுதப்பட்ட கடிதத்தினையும் சிறிமாவோ பத்திரிகையாளர் மகாநாட்டில் வெளியிட்டார்.

தான் குறிப்பிட்ட தினத்தில் CID முன் ஆஜராக இருந்ததாகவும் cid காரியாலயத்தில் இருந்து திரும்பும் போது தன்னைக் கடத்த அல்லது கொல்ல ஒரு அமைப்பால் திட்டமிடப் பட்டிருந்ததாகவும் தனக்கு உடல் ரீதியாகத் தீங்கு விளைவிக்கும் நோக்கத்திற்காக விசாரனை திட்டமிடப் பட்டதா? என்பது சந்தேகத்திற்குரியதாகும் எனவும் உடுகம் பொல அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அரசு மறுப்பு

இதே வேளை உடுகம்பொலவின் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் உண்மைக்கு மாறானவை என ஸ்ரீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

மேலும் ஸ்ரீலங்காவின் பிரதமர் டி.பி விஜயதுங்க விடுத்த அறிக்கையொன்றில் உடுகம் பொல இயங்கிய எல்லாப் பகுதிகளிலும் "கறுப்புப் பூனைகள்" தீவிரமாக இயங்கியதாகக் குறிப்பிட்டதோடு அரசைக் கவிழ்க்க முயலும் ஒரு குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வின் ஒரு பகுதியாக உடுகம் பொல உள்ளார் எனவும் சாடி யுள்ளார்.


## ஏன் இந்த முரண்பாடு?

1987 - 1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசின் நம் பிக்கைக்குரிய பொலீஸ் அதிகா ரியாக விளங்கிய உடுகம்பொ லவுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கு மிடையே ஏற்பட்ட முரன்பாட் டின் பின்னணி என்ன?
இக் கேள்வி இன்று பலர் மன திலும் எழத்தான் செய்கின்றது.

JVP ஒழிப்பு காலப் பகுதியில் உடுகம்பொலவின் நடவடிக் கைகள் அரசால் பாராட்டப் பட்டுள்ளன. மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கு ஆளான உடுகம்பொலவினை நேர்மையான போலீஸ் அதிகா ரியென ஸ்ரீலங்கா அரசு பாராட் டியதுண்டு. மறைந்த அமைச் சர் ரஞ்சன் விஜயரத்தினவின் ஆதரவு உடுகம்பொலவுக்கு இருந்தது.

மிக மோசமான மனித உரி மைக் குற்றச் சாட்டுக்கு உள் ளான ஸ்ரீலங்கா அரசு, மனித உரிமை மீறல் குற்றச் சாட் டுக்கு உள்ளான பொலீஸ், இராணுவ அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் தன் மீதான அழுத்தங்களை குறைத்துக் கொள்ளவும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படுகின் றது என்ற எண்ணத்தை ஏற் படுத்தவும் முயன்றது. இதன் அடிப்படையில் சர்வதேசரீதி யாக அபகீர்த்தியடைந்த உடு கம்பொலவுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்ததாகவும் அமைச்சர் ரஞ் சன் உயிருடன் இல்லாமையி னுல் உடுகம்பொலவைக் காப் பாற்ற எவரும் முன் வர வில்லை எனவும் இதனுலேயே அரசுக்கும் உடுகம்பொலவுக்கும் இடையே முரன்பாடு தோன்றி யதாகவும் கூறப் படுகின்றது.

> அரசைக் கவிழ்க்க முயலும் குழுவின் ஒரு பகுதியாக உடுகம்பொல உள்ளார்.
>
> டி. பி. விஜயதுங்க -



இன்னெரு காரணமும் இம் முரன் பாட்டுக்குக் கூறப் படு கின்றது. ஐ. தே. கட்சியிலி ருந்து விலகிய அதிருப்தியாள ராகிய லலித், காமினி குழு வின் ஆதரவாளராக உடுகம் பொல உள்ளார் என சில பொலீஸ் அதிகாரிகள் ஜனதி பதி பிரேமதாசாவிடம் தெரிவித் ததாகவும், இதன் பின்னர் அரசு உடுகம்பொலவுக்கு எதி ராகச் செயற் பட்டதாகவும் இதனுலேயே முரன்பாடு தோன்றியதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. உடுகம்பொலவின் அறிக்கையிலும் இக் கருத்தின் சாரம்சம் உள்ளது.

## குற்றவாளிக் கூண்டில் அரசு

அது என்னவாக இருந்த போதும் ஸ்ரீலங்கா அரசின் அர சியல் உயர் பீடத்தின் அங்கீ காரமும் ஆசியும் இல்லாமல் ஸ்ரீலங்கா அரச படையினரதும் விழிப்புக் குழுக்களினதும் மனித உரிமை மீறல்கள் உச்ச நிலையினை அடைந்திருக்க முடியாது.

சர்வதேச சட்டங்களிலும், உடன்படிக்கைகளிலும் பங்கா ளியாக உள்ள ஸ்ரீலங்கா அரசே விழிப்புக் குழுக்களின் உருவாக் கத்தினதும் செயற்பாட்டினதும் பின்னணியில் உள்ளது என்பது நிருபிக்கப் படும் பட்சத்தில் ஸ்ரீலங்கா அரசு பலத்த நெருக் கடிக்குள்ளாகும்.

சுருக்கமாகச் சொல்லின் மிகக் கொடூரமான ஒடுக்குமுறை இயந்திரத்தினை வைத்து தமிழ்த் தேசிய இனத்தினதும், சிங்கள மக்களினதும் அடிப் படை உரிமைகளை தற்போதய ஸ்ரீலங்கா அரசு பறித்து வருகி றது என்பதற்கு இக் "கறுப்புப் பூனைகள்" விடயம் ஓர் மேல திக உதாரணம். அவ்வளவு தான். ■

### சுதந்திரம்

"மானத்திற்காக அனைத்தையும் பணயம் வைக்கும் வீர, தியாக உணர்வு கொண்டவர் களால் தான் சுதந்திரத்தை எப்பொழுதும் போராடிப் பெற முடியும்."

www.tamilarangam.net

# பண்டிதர் குடியிருப்பு

யாழ். கண்டி வீதியில் எழுதுமட்டுவாள் சந்திக்கு தெற்கே நாலு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது கெற்பலிக் கிராமம். சிங்கள அரசின் இராணுவப் பயங்கரவாத நடவடிக்கைகளி னால் தமது சொந்த இடமான தீவுப்பகுதிகளிலும், அரியாலைப் பகுதியிலும் இருந்து வெளியேறிய மக்களை ஒருங்கிணைத்து குடியமர்த்தப்பட்ட இடமே பண்டிதர்குடியிருப்பாகும். தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆரம்பகால யாழ்மாவட்டத் தளபதி "கப்டன் பண்டிதர்" பெயரிலேயே இக்குடியிருப்பு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்குடியிருப்பு 250 ஏக்கர் தென்னந்தோப்பில் , மக்கள் போக்குவரத்து, பாடசாலை, வைத்திய சாலை, கூட்டுறவுச்சங்கம் ஆகியன அமைந்துள்ளதோடு, தமிழர் "புனர்வாழ்வுக்கழகம்" எனும் வாசகத்துடன் அலுவலக அறையுடன் கூடிய ஒரு பொது மண்டபமும் உள்ளது. இங்கு மக்கள் ஒன்று கூடவும், பத்திரிகைகள் வாசிக்கவும் வசதிகள் உள்ளன.


இக்குடியிருப்புப் பாடசாலையில் 557 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். யாழ் கல்வித்திணைக் கழத்தால் அனுப்பப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளனர். மேலும் பாலர் பாடசாலை, சத்து ணவு மையக்கூடம் என்பனவும் குறிப்பிடத்தக்கவை.

வைத்தியசாலை வசதி, சகலமக்களுக்கும் உதவக்கூடிய முறையில் ஒரு பெண் வைத்தியரும், இர ண்டு உதவியாளரும் இருக்கின்றனர்.

இங்குள்ள மக்களுக்கு "தமிழர் புனர்வாழ்வுக்கழகம்" கடன் அடிப்படையில் 200 பேருக்கு 8 லட்சம் ரூபா கொடுத்துதவியுள்ளது.

இங்குள்ள ப. நோ. கூட்டறவுக்கடை அமைக்க, த. பு. கழகம் கட்டிடவசதி செய்து கொடுத்துள்ள தன் மூலம் மக்கள் தமது பொருட்களை சிரமமின்றி பெற்றுக்கொள்ளக் கூடியதாய் உள்ளது.

தென்னைகளில் இருந்து பெறப்படும் மூலப்பொருட்களைக் கொண்டு தும்புத் தொழில் முயற்சி களை ஏற்படுத்தியுள்ளதோடு, இக்குடியிருப்பு பொதுவாக எல்லா அம்சங்களையும் ஒருங்கே கொண்டுள்ளது.




## பாடசாலைகள் தோறும்....
## தமிழீழத் தாயகப் படம் திரை நீக்கம்.

தமிழீழச் சிறார்கள் தமது பாரம்பரிய பிரதே சத்தை அறிந்து கொண்டு உண்மையின் கருவூ லத்தை பட்டறிவுமூலம் அறிந்து கொள்ளும் பொருட்டு யாழ் மாவட்ட பாடசாலைகள் தோறும் தமிழீழத் தாயகப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டுள் ளது. அத்துடன் தமிழர்களின் பாரம்பரிய பிரதேச வரலாற்றுக் குறிப்புகள், பொருளாதாரக் குறிப்பு கள், குடியேற்றப் புள்ளிவிபரங்கள், அரசியல் நோக்குகள், பிரதேசங்கள் குறிக்கப்பட்ட தாயகப் பட விளக்கம் என்பவற்றை உள்ளடக்கிய "நம்நாடு தமிழீழம்" என்னும் கைநூலும் வெளியிடப்பட்டுள் ளது. யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற இவ்வைப வமானது ஏனைய மாவட்டங்களுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்

விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையாவின் கிழக்கு மாகாணப் பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் பயணக் கட்டுரையிலிருந்து. . .





கரிகாலனுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் யோகன் வந்தார். மட்டக்களப்புப் பிராந்தியத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் இவர். 'பொது மக்களின் இரண்டு ட்றக்ரர்களுக்கு இராணுவம் சுட்டுவிட்டது' என்றார். என்ன நடந்தது என்று கேட்டேன், 'தமது பொருள்களை எடுத்து வர ஊருக்குள் போனபோது இராணுவம் சுட்டுவிட்டது' என்றார். 'எந்த இடத்தில்' என்று கேட்டேன். 'வந்தாறு மூலை அம்பலத்தடியில்'என்றார். 'பொது மக்களுக்கு ஏதாவது. . .' என்று கேட்டேன். 'அதைப் பற்றித் தெரியவில்லை' என்றார்.

மீண்டும் அடுத்த நாள் (03. 10. 90) அகதிகளைப் பார்க்கப் புறப்பட்டோம். அன்று செல்லும் குழுவுக்கு மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் விசு தலைமை தாங்கினார். புறுப்படும் போது பொம்பர்கள் வந்தன. எனவே ஒரு இடத்தில் தங்கி விட்டோம். பொம்பர்களின் குளப்படி முடிந்தவுடன் மீண்டும் புறப்பட்டோம். வழியில் சந்தித்தவர்களிடம் எங்கே பொம்பர் தாக்கியது என்று விசாரித்தோம். இலுப்பையடிச்சேனை, களங்காட்டு முனை, ஆகிய பகுதிகளில் தான் தாக்குதல் நடந்ததாகவும், நாலு மாடுகள் இறந்ததாகவும், தெரிவித்தனர். மவத்தப் பாலம் என்னும் இடத்தை அடைந்தோம். இந்த இடத்திற்குப் பக்கத்தில் 'மீசைக்காரர்' என்று அழைக்கப்படும் ஒருவர் எனக்குப் பரிச்சயமானவர். வயதானாலும் திடகாத்திரமானவர். நான் அடிக்கடி அவரிடம் செல்வதுண்டு. எனவே 'மீசைக் காரரிடம் போய் வருவோம்' என்றேன்.

'அவர் இப்போது உயிரோடு இல்லை. இந்திய இராணுவத்தின் காலத்தில் அவரைக் கொன்று விட்டார்கள்' என்றார் யோகன். 'என்ன நடந்தது?' என்று கேட்டேன். 'இந்திய இராணுவம் பிரதான பாதையை அண்டிய கிராமங்களில் தேடுதல் நடவடிக்கையை தொடங்கிய சமயம் பயத்தினால் ஓடிய மக்கள் இவரது வாடியில் தமது ரீ.வி போன்ற பொருட்களை வைத்து விட்டு காட்டுக்குள் ஓடினர். இந்திய இராணுவத்தினர் இவரது வாடிக்கு வந்த சமயம் ' எல். ரி. ரியினர் ரீ. வியா' என்று கேட்டனர். இவர் 'இல்லை' என்றார். இவரை அடிக்க முயன்றனர். 'நீ அடித்தால் நானும் அடிப்பேன்' என்றார். ஒருவன் அடித்தான். அடித்த இராணுவத்தை இடுப்பில் பிடித்து தலை கீழாகக் குத்தினார் மீசைக்காரர். அவரை அடித்தே கொன்று விட்டனர் இந்திய இராணுவத்தினர்' என்றார்.

இதைப்போல எத்தனை விடயங்கள் தான் வெளியுலகிற்குத் தெரியாமல் இருக்கின்றன. மீசைக்காரரின் வாடியைப்பார்த்தேன். சூழ்நிலை அமைதியாக இருந்தது. அந்தக் கம்பீரமான குரலை இனிக்கேட்க முடியாது என்ற கசப்பான உண்மையை ஜீரணித்துக் கொள்ளவேண்டி இருந்தது. அவரது அன்புக்குப் பாத்திரமான மாடுகள் நிமிர்ந்து பார்த்தன. பொங்கி வந்த கண்ணீரை துடைத்தபடி புறப்பட்டேன்.

போகும்போது விசுவிடம் "மட்டக்களப்பு அகதிகளின் உணவு நிலைமை என்ன மாதிரி?" என்று கேட்டேன். "கொஞ்ச நாட்களுக்கு சமாளிப்பார்கள். அதன் பிறகு தான் பெரும் உணவுப் பஞ்சம் வரவிருக்கின்றது" என்றார். "அந்தக் கொஞ்ச நாட்களும் எப்படிச் சமாளிப்பார்கள்?"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கேட்டேன். "அறு வடை செய்த வயல்களில் கதிர் பொறுக்குகிறார்கள், அறுவடை செய்யப் பயந்து வெட்டப்படாமல் இருக்கும் வயல்களில் யானைகள் மிதித்து சேதம் பண்ணியிருக்கின்றன. அந்த வயல்களிலும் போய் நெற்கதிர்களை அறுத்துக் கொண்டு வருகின்றார்கள். அதன் பிறகு தான் சிரமம். பெரும் உணவுப் பஞ்சத்தை எதிர் நோக்க வேண்டியிருக்கும்" என்றார். நிவாரண உதவிகள் என்ன மாதிரி? என்று கேட்டேன். "தற்போது தான் ஆரம்பித்திருக்கின்றார்கள். அதிலும் கூட முஸ்லிம்களின் அதிகாரம் தான் கொடிகட்டிப் பறக்கின்றது" என்றார்.



"ஏன் அரசாங்க அதிபர் தமிழர்தானே? ஏன் அவரால் இயன்றளவு செய்ய முடியாதா?" என்று கேட்டேன். "அரச அதிபர் தமிழர் தான். ஆனால் அவர் ஒரு பொம்மை மாதிரி இருக்க வேண்டியது தான். நடைமுறையில் அதிகாரம் அவரிடம் இல்லை. ஒரு முஸ்லிம் உதவி அரசாங்க அதிபரிடம் தான்" என்றார். "அதனால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன?" என்று கேட்டேன். "நிவாரணத்துக்கென வாங்கும் அரிசியை காத்தான் குடியிலுள்ள தனது மைத்துனனின் அரிசி ஆலையில் மட் டுமே கொள்வனவு செய்ய வேண்டும். என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவரது மில்லில் ஒரு மூட்டைக்கு ஆறு கிலோ அரிசி குறைவு இதை யார் எதிர்த்துக் கேட்க முடியும். நிறுத்துத் தரும்படி கேட்க கூட்டுறவாளர்களுக்குப் பயம், மூட்டைக்கு ஆறு கிலோ என்றால், அதை எப்படி; எந்தக் கணக்கில், பகிர்ந்தளிப்பது என்று கூட்டுறவுச் சங்கங்களும், கிராம சேவையாளர்களும் திணறுகின்றனர். இதே நிலைமை கூட சில நாட்களாகத் தான். அதற்கு முதல் எந்த உதவிகளும் இல்லை" என்றார். உலகத்தை ஏமாற்ற நிவாரணம் கொடுக்கின்றோம். என்று அரசு ஏமாற்ற முயற்சிக்கின்றது. அந்த நிவாரணத்தில் கூட மூட்டைக்கு ஆறு கிலோ முஸ்லிம்களின் அதிகாரத்துக்குப் போக வேண்டிய நிலை நிலவுகின்றது.

"முஸ்லிம்களின் நிவாரணங்கள் என்ன மாதிரி?" என்று கேட்டேன். அவர்களுக்கு ஏதும் சிக்கல் இருப்பதாகத் தெரிய வில்லை. அரசு இவர்கள் விடயத்தில் விசேட அக்கறை எடுக்கின்றது. சண்டை தொடங்கியதும் நகரத்தில் இருந்த முஸ்லிம் வீடுகளுக்கு இராணுவம் சென்று உங்களை நாங்கள் பத்திரமாக அனுப்பி வைக்கிறோம். என்று கூறி வெபர் அரங்குக்கும் அருகில் உள்ள பள்ளி வாசல்களுக்கும்கொண்டு வரப்பட்டனர். பின்னர் அவர்களை பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு அனுப்பி முஸ்லிம்கள் அகதிகளாகின்றனர். என்று உலகிற்குப் பிரச்சாரப் படுத்தி தனது அரசியல் நோக்கங்களை நிறைவேற்கப்பார்க்கின்றது" என்றார். "அரசியல் நோக்கங்கள் என்றால்...." என்றேன். " இங்கே முஸ்லீம்கள் அகதிகளாகின்றனர். என்று முஸ்லிம் நாடுகளுக்கு பிரச்சாரப்படுத்தித்தான் உதவிகள் பெறமுனைகின்றது ஸ்ரீலங்கா அரசு" என்றார்.

தொடர்ந்து "முஸ்லிம்களோ, இராணுவமோஇப்படித்தான் செய்வார்கள் என்று தெரியும். ஆனால் ரெலோவினர் செய்வதை நீங்கள் கேட்டால்....." என்றார். "சொல்லுங்கள்" என்றேன்.

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர்க்கால இலக்கியம்

**இலக்கிய சாட்சியம் என்ற நூலிலிருந்து**

1941/ஜுன்/21 ஆம் நாள் சோவியத் யூனியன் மீது ஹிட்லர் திடீர்ப் படையெடுப்பு நடத்தினான். 1936-38 ஆம் ஆண்டுகளில் நடந்த பயங்கரமான 'களையெடுப்பு'களின் காரணமாக கட்சி, அரசு ஆகியவற்றின் எல்லா உறுப்புக்களும் பலவீன மடைந்திருந்தன; மிகப்புகழ் பெற்ற செஞ்சேனைத் தளபதிகளும் பலியாகியிருந்தனர். சோவியத் யூனியன் நடத்திய தேசப் பாதுகாப்புப் போரின் முதல் கட்டங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு அது மட்டுமே காரணமல்ல என்ற போதிலும், முக்கியமான காரணமாக அமைந்தது. 1942 இலையுதிர் காலத்தில் ஹிட்லரின் படைகள் காகாசஸ் மலையடிவாரங்களுக்கும் வோகா நதிக் கரைக்கும் மாஸ்கோ, லெனின்கிராட் ஆகிய நகரங்களுக்கும் வந்து விட்டன. சோவியத் யூனியனின் மக்கட் தொகையில் சரி பாதி பேர் வாழும் பிரதேசங்கள் அப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. நாட்டின் தொழில் உற்பத்திக்கான மையப் பகுதிகளிற் பாதி எதிரியின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தது. இந்த நிலை ஸ்டாலினின் சர்வாதிகாரத்துக்கு மட்டுமல்லாமல் முழு நாட்டின், பல்வேறு தேசிய இன மக்களின் பண்பாடு, வாழ்க்கை, வரலாறு ஆகியவற்றுக்கான அச்சுறுத்தலாகவும் இருந்தது. சோவியத் யூனியனின் மக்கள் அனைவரும் தம் நாட்டைப் பாதுகாக்க எழுந்தனர். இராணுவத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் விரைவில் ஈடுசெய்யப்பட்டன. கிழக்குப்பகுதிகளில் உள்ள தொழிலுற்பத்தி பிரமாண்டமான அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டு எல்லாவகையான நவீன ஆயுதங்களும் போருக்குத் தேவையான பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆக்கிரமிப்பாளனுக்கு எதிரான போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கான திறமையான இராணுவத் தலைவர்களும், தளபதிகளும், போர்முனைக்குச் சென்றனர். பல லட்சம் தேச பக்த இளைஞர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்கள். இவையனைத்தும் சேர்ந்து போரின் போக்கை மாற்றியமைத்தன. நாட்டின் மேற்குப் பகுதியில் சோவியத் ஆயுதப் படைகள் முன்னேறிச்சென்று எதிரிக்கு மிகப் பலத்த அடிகள் கொடுத்து இராணுவரீதியில் ஹிட்லரைக் காட்டிலும் தமக்கிருந்த திறமையையும், வலுவையும் நிருபித்துக் காட்டின. ஹிட்லருக்கான ஆயுத-இராணுவ பலத்திற்கான ஊற்றுக் கண்கள் அன்று ஜேர்மனியில் மட்டுமல்லாது அவனது ஆக்கிரமிப்பின் கீழிருந்த மேற்கு ஐரோப்பாவிலும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவும், பிரிட்டனும் தமக்கு முதலில் ஏற்பட்ட பின்னடைவுகளில் இருந்து மீண்டும் தமது -இராணுவ எந்திரத்தை முடுக்கி விட்டு அச்சு நாடுகள் மீதான நிர்ப்பந்தத்தை அதிகரித்தன. ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் அந்த அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பியக்கங்களும், எதிர்ப்புப் போர்களும் வலுவடைந்தன. 1945. மே. 9 ஆம் தேதி சோவியத் யூனியன் முழு வெற்றியடைந்தது. கோடிக்கணக்கான உயிர்களை பலி கொடுத்துப் பெறப்பட்ட விடுதலை அது. லட்சக் கணக்கான மக்கள் போரின் போது பட்டினியால் மடிந்தனர். 'சோவியத் தாய் நாட்டைக் காப்போம்' என்ற முழக்கத்தின் கீழ் ஒவ்வொரு குடிமகனும் கட்சி, சித்தாந்த, வர்க்க, மொழி, இன வேறுபாடுகளை கடந்து செயற்பட்ட ஒரு வீர காவியக் காலகட்டம் அது. அந்தக் காலகட்டத்தில் சோவியத் இலக்கியம் முழுக்க முழுக்க ஒரு 'போர் இலக்கிய'மாகவே இருந்தது என்பது வியப்புக் குரியதல்ல. சோவியத் மக்களின் மிகப் பிரமாண்டமான பாசிச எதிர்ப்புப் போர், இலக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கியத்தின் எல்லா வகைகளுக்கும் வேண்டிய விஷயதானங்களை வழங்கியது. இத்தகைய இலக்கியங்களைக் கட்சியும், அரசும், கட்டாய மாக ஆதரிக்கவும், அவற்றைப் போர் நடவடிக் கைகளில் ஒன்றாகக் கருதியதும், கூட வியப் பானவை அல்ல. கட்டாய இராணுவ சேவையி லிருந்து எழுத்தாளர்களுக்கு விதி விலக்குத் தரப்பட்டது. ஆவேசமும் உற்சாகமும் ஊட்டும் இலக்கியப் படைப்புகள் போர்முனை நடவடிக் கைகளுக்கு நிகரானவையாக கருதப்பட்டன. அப்படி இருந்தும் ஆயிரக் கணக்கான எழுத் தாளர்களும் அறிவுஜீவிகளும் பத்திரிகையாளர் களும் இராணுவத்தின் பல்வேறு துறைகளில் பணியாற்றினர். அவர்களில் நூற்றுக் கணக்கா னோர் தம் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். அவர்களில் யூரி க்ரைமோவ், ஆக்கடி கய்தர், வாஸிலி ஸ்டாவ்ஸ்கி, அலெக்ஸாண்டர் அஃபி னாஜெனோவ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தேச பக்த, பாசிச எதிர்ப்புப்போர் இலக்கியங் களை உற்பத்தி செய்யுமாறு கட்சியும் அரசாங் கமும் எழுத்தாளர்களுக்கு ஆணையிடவேண் டிய தேவையே இல்லாமல் போயிற்று. மற்றோர் புறம் அழகியல் தராதரங்கள், கலா நேர்த்தி என்ற விடயங்களும் இக்காலகட்டத்தில் பொரு ளிழந்து விட்டன. விடயங்களைப் பதிவு செய் வதும் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்புவதுமே இலக்கியத்தின் முதன்மை நோக்கமாக இருந்து. ஆயினும் இந்தக் கால கட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான படைப்புகள்சோவியத் மக் களுக்கும் மனிதகுலத்திற்கும் இன்னும் கூட உத்வேகம் தரக்கூடிய மகத்தான படைப்புகளாய் விளங்குகின்றன. புனைவிலக்கியங்கள் மட்டுமல் லாது, இலியா ஏஹ்ரன்பர்க், அலெக்ஸி தோல்ஸ்தோய், மிகய்ல் ஷோலக்கோவ், டிகா னோவ் ஆகியோர் நாளேடுகளில் எழுதிய கட் டுரைகளும் சொற்சித்திரங்களும் மிக முக்கியத் துவம் பெற்றிருந்தன. குறிப்பாக ஏஹ்ரன்பர்க் எழுதிய கட்டுரைகள் போர் முனைகளில் இருந் தவர்களுக்கும் அவர்களுக்கு உதவி செய்து வந்த சாதாரண குடிமக்களுக்கும் சரிசமமான உத்வேகங்களைத் தருவதாக அமைந்தன. நூற் றுக்கணக்கான சோவியத் எழுத்தாளர்கள் போர்முனைகளில் பத்திரிகை நிருபர்களாகப் பணியாற்றினர். போர் நிகழ்ச்சிகளையும் சோவியத் மக்களின் பாசிச எதிர்ப்புப் போராட் டங்களையும், ஒரு இயற்கை வாதமுறையில் விவரிப்பதை அவர்கள் விரும்பவில்லை. 1942 ஏப்ரலில் நடந்த சோவியத் எழுத்தாளர் சங்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் "உள வியல் யதார்த்த வாதமும் மனிதாபிமான அணுகு முறையும் மட்டுமே மக்களிடம் தொடர்பு கொள்ளக் கூடிய ஒரு பொது மொழியை இலக் கியத்திற்கு வழங்கும்" என்று கூறியது. இத் தீர்மானத்தில் பொதிந்திருந்த உணர்வுகளை

# விருது

**இசையால் தமிழீழத்தை தலைநிமிரச் செய்தவர் பஞ்சாபிகேசன்.**

**கலை, பண்பாட்டுக் கழகம் வாழ்த்துச் செய்தி.**

நாதஸ்வர மேதை திரு. பஞ்சாபிகேசன் தன் இசை வல்லமையால் தமிழீழத்தை தலைநிமிரச் செய்த பெருந்தகை. இந் நாதஸ்வர மேதைக்கு அகில இலங்கைக் கம்பன் கழகம், "இசைப் பேரறிஞர்" விருது வழங்கி கௌரவித்தது. இக்கழகத்தால் வருடாவருடம் இசை வல்லுனர்கள் "இசைப் பேரறிஞர்" விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர்.

"அகில இலங்கை கம்பன் கழகத்தினர் தமிழீழ இசைக் கலைஞர்களுக்கு வருடா வருடம் இசைப் பேரறிஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதையிட்டு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் தனது வாழ்த்தினையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் இவ்விருதைப் பெறும் நாதஸ்வர மேதை திரு. எம். பஞ்சாபிகேசன் இவ்விருதுக்கு மிகவும் பொருத்தமானவர்; தமிழீழத்தை தன் இசை வல்லமையால் தலை நிமிரச் செய்த பெருந்தகை.

விருது பெறும் கலைஞருக்கும், அதை வழங்கி கௌரவிக்கும் கம்பன் கழகத்துக்கும் எமது வாழ்த்துக்கள். என கலை, பண்பாட்டுக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறைவேற்றும் வகையில் எழுதப்பட்ட படைப்பு களில் வாஸிலி க்ராஸ்மனின் "அமரத்துவம் பெற்றவர்கள்" என்ற நவீனமும் ஒன்று.

முப்பதுகளின் இறுதியில் மேலோங்கியிருந்த இலக்கியப் போக்குகள் அப்பழுக்கற்ற கதாநாய கன், புரட்சிகர ரொமாண்டிசிசம், 'நிர்மாண வேலைகளைத் தனியொருவனாகவே செய்யும் கட்சி உறுப்பினர்' போன்றவை, மறைந்து பாத் திரங்களின் சாதாரண மனிதத் தன்மைகளுக்கு அழுத்தம் தரும் படைப்புகள் தோன்றலாயின. க்ராஸ்மன் போன்ற எழுத்தாளர்கள், நாடகப் பாணியிலும் செயற்கையான முறையிலும் உருக் கமான அல்லது வீராவேசப் பேச்சுக்களைப் பேசும் பாத்திரங்களைப் படைக்காமல் மிக அடக்கத்தோடு நாட்டுக்காகத் தம் இன்னுயிர் இழக்கும் சாமான்யர்களைப் பற்றி எழுதினர். இத்தகைய மனிதர்களைப் பற்றி அவர் எழுது கின்றார்;

"போர்க்காலத்தில் வீழ்ந்தவர்களின் பெயர்கள் பல நூற்றாண்டுகள் வாழும் என்று கவிஞர்கள் சொல்வது வீண்;மடிந்து போனவர்களிடம் அவர் கள் உண்மையில் இறக்கவில்லை. புகழ் மிக்க நினைவுகளில் அவர்கள் என்றென்றும் தொடர்ந்து வாழவே செய்கின்றார்கள் என்று இக் கவிஞர்கள் கூறுவதும் வீண். நூற்றுக் கணக் கான ஆயிரக் கணக்கான பெயர்களை மனித னால் தன் நினைவில் தக்கவைத்துக் கொள் ளவே முடியாது. இறந்தவர்கள் இறந்தவர்கள் தாம். கடினமான வேலைக்குப் போவதைப் போலவே போருக்கும் லட்சக் கணக்கானோர் சென்றனர். எல்லையற்ற போர்க்களத்தில் மிகச் சாதாரணமாக, துறவிகள் போல், எளி மையுடன் மடிந்தவர்களின் பெற்றோர்கள் மகத் தானவர்கள் -வாழ்க்கை முழுதும் உழைத்த அந்த எல்லாத் தச்சர்களும் சுரங்கத் தொழி லாளர்களும் குழி தோண்டு பவர்களும் நெசவா ழிகளும் விவசாயிகளும் மீளாத் துயிலில் ஆழ்ந் துள்ளனர், அவர்களது முன்னோர்களைப் போலவே முன்பு அவர்களும் தமது வியர்வை யையும், கடினமான பல சமயங்களில்சகிக்க முடியாத-உழைப்பையும் தந்திருக்கின்றார்கள். இப்போதோஅந்தப் பயங்கரமான நேரம் வந்ததும் தமது ரத்தத்தையும் தந்திருக்கின்றார்கள்"

போர்க்காலம், இது காறும் புறக்கணிக்கப் பட்டோ அல்லது ஒடுக்கப்பட்டோ வந்த எழுத் தாளர்கள் அனைவரும் தமது கசப்புணர்வுகளை மறந்து விட்டு தேசத்தின் பாதுகாப்புக்காகத் தமது இலக்கியப் பாத்திரங்களை வகிக்குமாறு செய்துவிட்டது. போரிஸ், பாஸ்டர்நாக், அன்னா, அக்மதோவா போன்ற மகத்தான கவிஞர்கள் தேசப் பற்றை ஊக்குவிக்கும் கவிதைகளை எழுதினார்கள். போர்க்காலத்தில் எழுதப்பட்ட கவிதைகள் போர் முனைகளிலும் பிற இடங்க ளிலும் மிகப்பெரும் உத்வேகத்தை தட்டியெழுப்

பக் கூடியனவாக இருந்தன. கான்ஸ்டான்டின் ஸிமனோவ் (1915-1974) எழுதிய கவிதை ஒன்று பல லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விநி யோகிக்கப்பட்டது. 1942 பெப்ரவரியில் நாஜிப் படைகள் மாஸ்கோவிலிருந்து விரட்டியடிக்கப் பட்டபோது 'ப்ராவ்தா' நாளேடு வெளியிட்ட இக் கவிதையை போர்வீரர்கள் செய்தித் தாழ் களில் இருந்து கத்தரித்து எடுத்து, பதுங்கு குழிகளில் பிரதிகளெடுத்து, மனப்பாடம் செய்து மனைவி யருக்கும், காதலிகளுக்கும் அதை எழுதி அனுப் பினர். போரில் காயமடைந்தவர்கள் இறந்தவர் களின் சட்டைப் பைகளில் இக்கவிதையடங்கிய தாள்கள் காணப்பட்டன. 'எனக்காகக் காத்திரு' என்ற தலைப்பிடப்பட்ட அக் கவிதை:

எனக்காகக் காத்திரு, திரும்பி வருவேன் நான்
காத்திரு, வருவேன் நான்
இலையுதிர்காலத்து மஞ்சள் நிற மழையினூடும்
அது தரும் சலிப்பினூடும் காத்திரு
உன் இதயத்தைத் திடப்படுத்து வருந்தாதே,
பனிக் காலத்தின் மூட்டத்தினூடே காத்திரு
காற்றினூடும் சீறும் சூறாவளியினூடும் காத்திரு
கோடையின் ஒளி வீச்சினூடே காத்திரு
மற்றவர்கள் இனிமேலும் காத்திராத போதும்
மங்காத நம்பிக்கையுடன் காத்திரு
காத்திரு, கைவிடாதே நம்பிக்கையை
எனக்காகக்காத்திரு, திரும்பி வருவேன் நான்
அன்பே பொறுமையைக் கற்றுக்கொள்.
நான் திரும்பமாட்டேன் எனச் சொல்பவரிடமிருந்து
நீ விலகி நில்
என் மகனும் தாயும் துக்கத்தின்
கண்ணீரைச் சிந்தி அழட்டும்
என்னை மறந்துவிடவேண்டியதுதான் என
நண்பர்கள், அடித்துச் சொல்லட்டும்

அவர்களின் அனுதாபச் சொற்களைக் கேட்காதே,
என் நினைவுக்காக அவர்கள் குடித்தால்,
சேராதே அவர்களுடன்.
எனக்காகக் காத்திரு, காத்திராத அவர்கள்
சொல்லட்டும் உன்னுடன் நான் இணைந்த பின்னர்
அதிர்ஷ்டம் தான் நம்மை இணைத்ததென்று.
மரணத்தின் ஒவ்வொரு வகையையும் சிதைத்து
அந்தக் கொடும் தீப்பிழம்பினூடே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் நலமுடன் வந்தேன் என்பதை
நம்மிருவர் மட்டுமே அறிவோம்.
உறுதியோடும், பிடிவாதத்தோடும்
நீ காத்திருக்கக் கற்றதினால்,

பூமியில் வேறு எவர் மாதிரியுமின்றி
அன்பே, நீ எனக்காகக் காத்திருந்ததினால் மட்டுமே
நிகழ்ந்தது அது."

போர்க்கால இலக்கியங்கள் சில முக்கியமான பிரச்சனைகளை எழுப்பின. பாசிச எதிர்ப்புப் போரின் முக்கியத்துவம் என்ன? மக்களின் வீரவுணர்வைத் தட்டியெழுப்பி அதை வலுப்படுத்திய காரணியாது? மரபு வழி வந்த தேசபக்தியா? அல்லது புரட்சியால் தட்டியெழுப்பப்பட்ட புதியதொரு தேசியப் பொறுப்புணர்வா? சோவியத் மக்கள் தமது நாடு தமது முன்னோர்களின் புனித பூமி என்பதற்காகப் போராடுகிறார்களா? அல்லது எதிர் காலத்தில் சுபீட்சத்தைத் தருவதாக வாக்களிக்கும் பூமியைப் பாதுகாக்கவா? மிகக் கொடூரமான மரணத்துக்கும் பட்டினிக்கும் உட்படுத்தப்பட்ட, முன்னுவமை காணாத மனோதிடத்தை வெளிப்படுத்திய கோடானுகோடி சோவியத் ரஷ்ய மக்களின் இயல்பு பற்றிய எத்தகைய முடிவுகளை வகுக்க இயலும்? லெனின்கிராட் முற்றுகையிடப் பட்டிருந்த 900 நாட்களில் ஏழு லட்சம் நகரவாசிகள் நாஜிகளின் குண்டு வீச்சுக்கும் பசிக்கும் பட்டினிக்கும் இரையானார்கள். ஒரு நாடு முழுவதும் ஒரு அசாதாரணமான தீரச் செயல்களையும் தியாகத்தையும் செய்ய முடியுமென்றால் அதற்கே உரிய உள்ளார்ந்த தன்மைகளா? அதன் ஆன்மாவா? ஸ்டாலினியக் கொடும் கோன்மையையும் கொடும் அடக்கு முறைகளையும் மறந்து மக்கள் ஒரே கொடியின் கீழ் திரளக் காரணம் என்ன? இத்தகைய கேள்விகளுக்கான பதில்கள் வழக்கமான மார்க்சிய விளக்கத்தைத் தாண்டிச் சென்றன. காலங்காலமாகவே ரஷ்யர்களிடமிருந்து வந்த வீரப் பண்புகள், சோவியத் யூனியனின் பல தேசிய இன மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்திய பொது இலட்சியம் (நாஜிச எதிர்ப்பு) ஆகிய இரண்டு அம்சங்களையும் எழுத்தாளர்கள் வலியுறுத்தினர். ஆயினும் 'தேசப் பற்று' என்ற அம்சத்திற்கே கட்சியாலும் அரசாங்கத்தாலும் மேலதிக அழுத்தம் தரப்பட்டது.

இலக்கியத் துறையில் குழுச் சண்டைகளும் வெளி நிர்ப்பந்தங்களும் தற்காலிகமான ஓய்வு பெற்றன. தணிக்கை விதிகள் தளர்த்தப்பட்டன. பாணிகளிலும் கருத்துக்களிலும் சுதந்திரம் அதிகரித்தது. பல ஆண்டுகள் மௌனத்தில் ஆழ்த்தப் பட்டிருந்த பழம் எழுத்தாளர்கள் மீண்டும் எழுதவும் பிரசுரிக்கவும் தொடங்கினர். இருபதுகளில் இருந்தது போன்ற ஒரு இலக்கிய மறுமலர்ச்சிக்கான அறிகுறிகள் தோன்றலாயின. பாசிச எதிர்ப்புப் போரில் உலகெங்கும் கம்யூனிஸ்ட்களும் கம்யூனிஸ்ட் அல்லாதவர்களும் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணி இயக்கத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சோவியத் எழுத்தாளர்

களும் சுதந்திரத்தை நேசிக்கும் அனைத்து மக்களின் சகோதரத்துவம் பற்றிப் பேசத் தொடங்கினர். மூன்றாம் அகிலம் கலக்கப் பட்டிருந்தாலும் கிரேக்க வைதீக கிறிஸ்துவத் திருச் சபையுடன் அரசாங்கம் நல்லிணக்கம் கொள்ளத் தொடங்கியதாலும் இறுக்கம் தளர்த்தப்படும் என்ற நம்பிக்கை உருவாயிற்று. ஆனால் போருக்குப் பிந்திய நிலைமைகள் முற்றிலும் வேறு விதமாக இருந்தன. ■



இலங்கைப் பாதுகாப்புப்படை வடபகுதி மீது படை எடுக்குமானால், இப்பொழுது அகலத் திறந்திருக்கும் எமது சமாதானக் கதவுகள் மூடப்பட்டுவிடும். போரும் பேச்சுவார்த்தையும் என்ற அணுகுமுறை சாத்தியப்படாது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்பதில் சிங்களக் கட்சிகள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நெருக்கடிமிக்க வரலாற்றின் திருப்பு முனையில் நாம் இப்பொழுது நிற்கின்றோம். எதிரிகள் வெறிகொண்டு எம்மீது புதிய ஆக்கிரமிப்பை மேற்கொள்ளலாம், அந்த ஆக்கிரமிப்பை வெற்றிகொள்வதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

தலைவர் வே. பிரபாகரன்
(அன்னை பூபதியின் நினைவுநாள் வானொலி உரையிலிருந்து. . . )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காதலர்கள்

கருவறையில் பூத்த கண்மணிகள் - அவர்கள்
கண்ணுறக்கம் காணாத கார்மேகச் சிட்டுக்கள்.
கயவர் கூட்டங்களின் அரண்களுக்கு ஆப்பு வைத்து
கண்ணிவெடித் தெருக்களிலே கண்துயிலாக் - களப்புலிகள்

காடு களனிகளாய்க் களம் அமைத்து - தமிழ்
நிலம் மீட்க சீறி எழும் தமிழ்த்தாயின் மைந்தர்கள்
இள நங்கை இதயங்களுக்காய் ஏங்கும் இளவயதில் - இன்று
எம்மக்கள் இதயச் சிறைகளில் காதலர்களாய்.

- மோகன் -

## நாளைய புதைபொருள்

இருளின் மயானம்
பதுங்கு குழியை விட்டு
மனித ஜீவன்கள்
வெளியே வரும் இரவுவேளை

அந்த வேளையிலும்
எங்கோ
வெடிச்சத்தம் கேட்க
இமைகள் பயத்தில் விரிந்தன.

மீண்டும் கால்கள்
பதுங்கு குழியை நோக்கி
நடைபோட
கிழங்களும் குழந்தைகளும்
அடங்கிய குழிக்குள்
நாய்களும் பூனைகளும்
பதுங்கிக் கொண்டன

பிள்ளைகள்தான் தாக்கினம் போல
இரு கிழங்கள்
முணுமுணுத்துக் கொண்டன

மரபுத் தமிழரின்
பெருமை பேசி வந்த கிழங்கள்
இன்று, தம் பிள்ளைகளின்
வீரத்தின்
பெருமைகள் பேசின.

இருளுடன் மௌனம் போராட
அமைதி காத்த குழிக்குள்
அது நடந்தது.

எங்கிருந்தோ எதிரிகளால்
ஏவப்பட்ட செல்
அந்தப் பதுங்குகுழிக்குள்
வந்து விழுந்தது.

அடுத்த வினாடியில்
அலறல் எடுத்த குழிக்குள்.
அலறல்கள் அடங்கி
மண் சரிந்தது...

விடியும் பொழுது
வானத்தில் தெரிய
அந்தப் பதுங்குகுழி.
வெறும் மண் குவியலானது -
நாளைய புதைபொருள்
ஆராய்ச்சிக்காக.

- மாறன் -
பாரிஸ்

என் இனிய தேச
குறிப்பெடுத்துக் ெ

எரியுண்டு
சிதையுண்டு
என் தேசத்தி
காப்பகழி
எழுகின்ற
உணர்வு
குறிப்பெ

இந்த
எப்ப
நேசி
தெ

www.tamilarangam.net

## பெண் புலி

இந்தப் பறவை தன்
சிறகை விரித்து
சொந்தக் காலுக்கு(ச்)
சுதந்திரம் கொடுத்தது.
பிறர் - கொஞ்சிக் குலவவென்றே
கூட்டுக்குள் வளர்த்த கிளி
விஞ்சி நிற்கும்
இன்று வீரத்தில் பெண்புலி.

கோடைக் கதிரின் அனல்
இவள் குளிர் விழிகளில் கனன்றிருக்கும்
தோளில் நெருப்புமிழும்
துப்பாக்கி நிமிர்ந்து நிற்கும்.

வீணில் வாழ்ந்து
விரக்தியில் மடிபவரே,
காணீர் இவள் சக்தியென,
விடுதலைக் கனிபறிக்க
வீரக் களமாடும்
பெண் வேங்கை இவள் என்று.

- ஜெகதீஸ்வரி ராஜரட்ணம் -
ஜேர்மனி.

## ...ன் தேசமே"

...ம்!
...ாள்

...ான
...ன்
...றில்
...லைகளை
...த்துக் கொள்.

... தேசத்தை
... நான்
...த்தேன் என்று
...ியுமா உனக்கு?

...ன் தலைமையை
...படி நான்
தெரிந்தெடுத்தேன் என்று
தெரியுமா எனக்கு?

கீழ்வானம் எமக்கு
எப்போது சிவக்கும்?
என் இதயத்தின் துடிப்பிது
கேட்கிறதா உனக்கு?

என்னால்
விளங்கப்படுத்த முடியவில்லை
ஆனாலும்
என் தேசமே
குறிப்பெடுத்துக் கொள்.

இன்னும்
என்
அம்மா என்ற பெயரில்
உயிரோடு உலாவும்
எலும்புக் கூட்டை
நீ
கண்டிருக்கிறாயா?
ஆம்! கண்டிருப்பியாய்
நடைப்பிணமாய் திரியும்
'அதன்' கால்கள்
நிச்சயம்
உன் மடியில்
பதிந்திருக்கும்.

வாழ்வின்
பற்றுக் கோட்டினை
தேடி அலையும்
இந்த எலும்புக் கூடு
தினம் தினம்
என் நினைவில்
வந்து போனாலும்
இன்னும் எதன் மீது
அன்பு செலுத்துகிறேன்
தெரியுமா உனக்கு?

தெரிந்து கொள்
உன் மீது தான்
இருண்டு போயிருக்கும்
என் தேசத்தில்
ஏற்றப்படும்
விடுதலைத் தீபத்திற்கு
என் உயிரும்
எண்ணெயாய்
ஊற்றப்பட வேண்டும்

குறிப்பெடுத்துக் கொள்
என் தேசமே
குறிப்பெடுத்துக் கொள்!

- விடிவெள்ளி -
தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெருக் கூத்து (வீதி நாடகம்)

## ஒரு பார்வை

மாணி நாகேஷ்

கலை கலைக்காக மட்டுமின்றி அது மக்களுக்காகவே உருவெடுக்கும்போதுதான் ஒரு கலை வடிவமானது உயிர்ப்புப் பெறுகின்றது; முழுமை பெறுகின்றது. மனித சமூகத்தின் வாழ்வியல் தேவைகளுடன் பின்னிப் பிணைந்ததே உண்மைக் கலையாகும். அத் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஓர் கலைப்படைப்பானது தன்னை எவ்வளவு தூரம் அர்ப்பணித்து நிற்கிறது என்பதைப் பொறுத்தே அதன் உன்னதத் தன்மையை நாம் இனம்காண முடியும். இந்தவகையில் தெருக்கூத்து அல்லது வீதிநாடகம் என்கின்ற உயரிய கலைவடிவம் பற்றியும் அதன் சிறப்புத் தன்மைகள் பற்றியும் இக்கட்டுரை வாயிலாக ஓரளவாயினும் அறிய முற்படுவோம்.

தெருக்கூத்து என்றதும் தெருக்களிலும், வெளி இடங்களிலும் கலைஞர்கள் ஒன்றுகூடி நடத்தும் சாதாரண நாடக நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம். ஆனால் மற்றைய கலை வெளிப்பாடுகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு நின்று மனித சமூகத்திற்கு அளப்பரிய பணி ஆற்றவல்ல ஓர் உயரிய 'கலை ஊடகம்' இது என்பதை அதன் வரலாற்றுப் பின்னணியோடு நோக்கும்போதே எம்மால் உணரமுடிகின்றது.

தெருக்கூத்தானது மக்களைத் தேடிச்சென்று மிகக் குறுகிய காலத்தில் மிக உன்னதமான கருத்துக்களை கலையின் பல்வேறு கூறுகளையும் ஒருங்கே உள்ளடக்கி வெளிக்கொணரப் படுவதாகும். மேடை நாடகங்களைப்போலல்லாது அது மக்கள் மத்தியில் வெளிக்கொணரப்படும் வகையில் சற்று வேறுபட்டு நிற்கும் இதனை இருபதாம் நூற்றாண்டின் விசித்திரம் என்றே கூறலாம். கலைஞனுக்கும் மக்களுக்கும் இடையே ஓர் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திநிற்கும் இக்கலைப் படைப்பானது 1917 ம் ஆண்டு ருஸ்சியப் புரட்சியைத் தொடர்ந்துதான் உலகிற்கு அறிமுகமானது. இது முழுக்க முழுக்க நமது சகாப்தத்தின் கலை வடிவமேயாகும். புராதன காலங்களிலும் மக்களைத் தேடிச்சென்று நாடகம் நடத்துகின்ற பழக்கம் இருந்து வந்திருக்கின்றது. கிராமப் புறங்களில் கோவில் திருவிழாக்களிலும் மக்கள்கூடும் பொது இடங்களிலும் நாட்டுப்புறக் கூத்துநிகழ்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் தெருக்கூத்து நாட்டுப்புறக் கலைவடிவங்களின் சில கூறுகளைத் தன்னுடன் கொண்டிருந்தாலும் பல்வேறு அம்சங்களிலும் அப்புராதன கலை வடிவங்களில் இருந்து வேறுபட்டு நின்று மனித சமூகத்தின் சுதந்திர உணர்வுகளுடன் இரண்டறக் கலந்து மக்களை எழுச்சி கொள்ளச் செய்யும் ஓர் உன்னதமான கலைவடிவமாக விளங்குகின்றது.

சாராம்சத்தில் பெரும்பாலும் அரசியல் தன்மையுடைய இந்த வீதி நாடகங்கள் மக்கள் கூடுமிடமெங்கும் திடீரெனத் தோன்றி மக்கள் மனங்களில் விழிப்புணர்ச்சி விதைகளை விதைத்துவிட்டு மறைந்துவிடுவதுண்டு. தெருச் சந்திகள், கடை வீதிகள், சந்தைகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், தொழிற்சாலை வாசல்கள், கிராமிய வயல்வெளிகள் என இக்கலை பிறப்பெடுக்கும் இடங்கள்பல.

வீதி நாடகத்தின்போது நடிகனுக்கும் பார்வையாளனுக்கும் உள்ள உறவு என்பது இணையற்றது மட்டுமன்றி முற்றிலும் புதியதும்கூட. நாடகம் பார்ப்பதற்குமுன் தயார் நிலையில் இல்லாத மக்களை திடீரென தன்பால் ஈர்க்கவேண்டிய தேவை வீதி நாடகத்திற்கு இருக்கின்றது. இந்தப் புதிய சூழ்நிலையும் இவற்றின் நிர்ப்பந்தத்தால் எழுகின்ற தேவைக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளும்தான் வீதி நாடகத்தினை புதுமையானதாக்குகின்றது. வட்டவடிவமான நடிப்பிடம், நாடக நிகழ்வின்போதுள்ள நிலைமைகள்.... இவையனைத்தும் ஒரு புதிய நாடகப் பாங்கினை, நாடகம் எழுதுவதில் புதுவகையான திறமையை, புதுவித பயிற்சி முறையை, இசை, கவிதை, உரைவீச்சுக்கள் புதிய விதத்தில் பயன்படுத்தப்படுவதை, நடிகர்களைப் பயன்படுத்துவதில் புதிய அணுகுமுறையை நாடகம் நடத்துபவர்களிடம் இருந்து வேண்டுகின்றது.


வரலாற்றின் மிக நெருக்கடியான காலகட்டங்களிலேயே மிக அதிகமாக தோற்றம் பெற்ற இந்த வீதி நாடகங்கள் மக்களை சார்ந்து நின்று அவர்களின் விடிவிற்காய் தன்னை அர்ப்பணித்து நின்றதெனலாம். ருஸ்சியாவில் பதட்டம் மிக்க போர்க் காலகட்டத்தின் போதெல்லாம் சோவியத் நாடகத்துறையினர், ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான தடவைகள் இத்தகைய நாடகங்களை நிகழ்த்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. காடுகள், போர்முனைகள், பதுங்குகுழிகள், இராணுவ லொறிகள், போர்க் கப்பல்கள், மருத்துவ மனைகள் என பல இடங்களிலும் இவை நிகழ்த்தப்பட்டன. இதே போன்றே சீனாவிலும் மாவோவின் தலைமையிலான நீண்ட பயணத்தின் போது அங்குள்ள நாடகக்குழுக்கள் பல்வேறு வீதி நாடகங்களை நிகழ்த்தினார்கள். இதேபோன்று, பல உலக நாடுகளிலும் மக்கள் ஆதிக்க சக்திகளால் அடக்கி ஒடுக்கப்படும்போது இந்த உயிர்த்துடிப்புள்ள கலைப்படைப்பானது வீதிக்கு வந்து மக்களின் பிரதிநிதியாய் உரிமைக் குரல் கொடுத்ததை வரலாறுகள் கூறுகின்றன.

இந்தியாவிலும்கூட இந்த வீதி நாடகங்கள் எழுச்சிபெற்றுக் காணப்படுகின்றன. குறிப்பாக வட இந்தியாவில் 'சப்தர் காஸ்மி' என்னும் உண்மைக் கலைஞனின் புதுமையைத் தேடும் தாகத்தில் உன்னத வளர்ச்சி கண்டன வீதி நாடகங்கள். இந்திய அரசுகளினதும், அரசியல் வாதிகளினதும் அராஜகங்களையும், அட்டூழியங்களையும் பல நூற்றுக் கணக்கான வீதி நாடகங்கள் மூலம் மக்கள் முன் கொண்டு வந்தார் சப்தர்காஸ்மி. இவர் 89 ம் ஆண்டு பட்டப்பகலில் இந்திய வல்லாதிக்க சக்திகளின் கைக்கூலிகளால் அடித்துக் கொல்லப்பட்டார். இச்சம்பவமானது வீதி நாடகம் அரச இயந்திரங்களின் அடக்குமுறைக்கெதிரான வலிமைமிக்க சக்திவாய்ந்த ஆயுதம் என்பதை எமக்கு நன்கு தெளிவுறுத்துகின்றது.

இன்று தமிழீழ விடுதலைப் போர், விடியலை நோக்கிய பயணத்தில் மிக உறுதியாக தமது பாதச் சுவடுகளை முன்னோக்கி பதித்து வைத்திருக்கும் இவ்வேளையில் இந்த வீதி நாடகங்கள் அவற்றிற்கு உரித்தான தனித்துவத் தன்மையுடன் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் திடீர் திடீரென தன் எழுச்சி முகம் காட்டி ஈழப் போரை விரைவுபடுத்தி நிற்கிறது. தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினர் போர்க் கால சூழ்நிலைக்கேற்ப இந்த வீதி நாடகங்களை நடத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

மக்களது உணர்வெழுச்சியை வலிவுடன் வெளிப்படுத்தும் ஒரு தொடர்புச் சாதனமாக வீதி நாடகங்கள் விளங்குகின்றதெனலாம். இது இலகுவானது, எளிமையானது, வீரியமுள்ளது அத்துடன் வீதி நாடகமானது ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள போர்க் குணாம்சம் உடைய அதி உன்னத கலை வடிவமாகும். ■

ஆதாரம்: சப்தர் காஸ்மியின் 'நாட்டியக் கலைகள் நூலிலிருந்து.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "களத்தை நோக்கிய கடிதம்"



புனிதன்

அன்பின் நண்பா!


வசந்தத்தை மக்களுக்கு வழங்க வென்றே நீ ஈழம் எனும் மலர்த் தோட்டத்திற்கு உரமாக காத்திருப் பதை முதற் கண் மதித்து இம்ம டலை தொடர்கின்றேன். விடுதலை இலட்சியத்திற்காய் இதயத்தில் ஆயிரம் கனவுகளுடன் புறப்பட்ட நாங்கள் இணைவு, முரண்களை அரண்களாக்கி சில பாசிச அரசுக ளுக்கு தங்களைப் போல் எம்மையும் ை ம் பொம்மையாக இருக்க வேண்டும் என்று நம்மை பதப்படுத்த முற்பட்டபோது தட்டிக் கேட்ட நம் மில் பலரை படு குழிக்குள் தள்ளி னார்கள். என் போன்ற பலரை விடுதலைப் பாதையை விட்டு ஒதுங்க வைத்ததும் கண்கூடாக நீ பார்த்த நிகழ்வுகள்தானே. மக்களுக் காக ஆயுதம் ஏந்த புறப்பட்ட நாமே தம்மை ஏமாற்றி விட்டதாக சிலர் போக்கை வைத்து மக்கள் நினைக் கத் தொடக்கி விட்டனர். அவர்க ளுக்கு புதிய தெம்பையும் தெளிவை யும் அளிக்க வேண்டுமாயின் இந்த "இணைவு முரண்களை" உடைத்தெ றிந்த தற்போதைய நிலையில் நாட் டில் மிகவும் கட்டுக் கோப்புடன் களத்தில் நிற்கும் உன்னவர் பாசறை யில் எம் போன்ற பலர் இரண்டறக் கலக்க தயாராகிக் கொண்டிருக்கின் றார்கள். வீடு பற்றி எரியும் போது வீட்டைப் பற்றி விமர்சனம் செய் வதா? அல்லது நெருப்பை நூர்க்கப் போராடும் மனிதர்களுடன் சேர்ந்து நாமும் நெருப்பை நூர்க்க ஒரு வாளி தண்ணீர் ஊற்றுவதா என்ற கேள் விக்கு என்னுள் எழுந்த விடை வீடு என்ற நம்நாடு பற்றி எரியும் போதும் விமர்சனத்திலே ஈடுபட்டால் அது பாரத போர்க்களத்தில் தரம் கெட்ட பாத்திரமாக சான்றோர்களால் வர் ணிக்கப்பட்ட "தேரோட்டி சல்லியன்" போன்றவர்களாகத்தான் இருக்க முடியும்.

நண்பா! இவ் மடலில் ஒரு விட யத்தை நினைவு கூருகிறேன். 86ம் ஆண்டில் உன் "பாசறை" நண்பனும் என் பால்ய நண்பனும் ஆகிய கரும் புலி மில்லர் சொன்னான் "எதிரியின் கைப்பலம் ஓங்கியிருக்கின்றது, எம் கரங்கள் உறுதி மிக்கவைதான் ஆனாலும் விரல்கள் பிரிந்திருக்கின் றனவே" என்று. அவன் காற்றோடு கலந்து விட்டாலும் தெளிவுள்ள போராளிகள் சிதறாமல் போராட்டத் தில் இணைய வேண்டும் என்று விரும்பினான். இப்போ. கால நிகழ் வுகளின் மாற்றத்தாலும் தெளிவான சிந்தனைகளாலும் கடல்தாண்டி வந்த போராளிகள் தாங்கள் உதிரிகள் தான் எதிரிகள் அல்ல என்பதை எதிராளிக்கு உணர்த்த உன்னவர் பாசறை நோக்கி அணிவகுக்கும் காட்சி எம் போன்ற பலருக்கும் உனக்கும் மில்லரைப் போன்ற உறங் காப்புலிகளுக்கும் பேருவகை தரும் என்பதில் ஐயமில்லை நண்பனே. இருளில் இருந்து வெளிச்சத்திற்காய் கூவிக் கொண்டு கூடத்தில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கின் மீதே மண் கொட்டிய கதையைத்தான் கடந்த காலத்தில் தெளிவற்ற தலைவர்கள் செய்தார்கள். நண் பனே! நாம் அழகை ஆராதிப்பது அவலட்சண வழிபாட்டுக்கா? இல்லை இல்லை இனிமேலாவது திடங் கொண்ட தோள்களும் மூளை யின் அறிவும் காதல் கண்களில் கனன்றெழும் விடுதலைத் தாகமும் கரங்களின் வலிவும் - இனியாவது போராட்ட நீரோடையில் இரண்டற கலந்து எதிரியின் சூழ்ச்சியை முறியடிக் கும் என்பதை உறுதிகூறி மீண்டும் விடுதலை இலட்சியத்திற்காய் வீறு நடைபோடும் உன் விடுதலை உணர் விற்கு என் கரம் கூப்பி வணங்கி, இம் மடலை முடிக்கின்றேன். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேலிகளை விட்டு வெளியே



முருகேசு - தமிழீழம்.

கடுமையான சோழக்காற்று. முற்றத்தில் நின்ற பனைமரம் காவடி ஆடிக் கொண்டு இருந்தது. வட்டுத் தெரியாமல் சுமந்து நின்ற குலைகளைக் கண்டு பொன்னம்மாவுக்கு ஒரு ஏக்கத்தின் சாயல். உண்மைதான். நிறைந்த வளத்தோடு திரியாயில் வாழ்ந்தவள். அவளுடைய வாழ்வு இப்படியாகி இருக்குமென்று யாரும் எண்ணி இருக்க மாட்டார்கள்.

இலங்கை அரசின் இனஅழிப்பு நடவடிக்கைகளினால் அவளும் அகதியாக்கப்பட்டாள். அவள் குடும்பம் குமுழமுனையில் குடியேறியது.

நாலுபேரை வைத்து சிறப்பாக தொழில் நடத்திய கணபதிப்பிள்ளைக்கு தம் மண்ணையும், வளத்தையும் விட்டு வந்ததும் தன் சொத்துக்கள், சுகங்கள் இழந்ததும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. திடீரென்று மீளாத் துயிலில் சுமையை மாற்றி விட்டார்.

பனை மரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்ட பொன்னம்மாக்கா கிழக்குப் பக்கமாக கடவையைப் பார்க்கிறாள். அந்தக் களப்புக் கடலின் ஓரமாக இருந்த கொட்டில் வீட்டில் எழுந்து வரும் சூரிய கதிரின் தாக்கம் சுள் என்று கொட்டியது.

திரியாயில் இருந்து வந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. இதற்குள் அவள் பட்ட கஷ்டம்..... கணபதிப்பிள்ளையர் சுகமாகப் போய்விட்டார். நான்... ஒரு நீண்ட பெருமூச்சை பொன்னம்மா விடுகிறாள்.

என்னதான் பெண்கள் விடுதலையைப்பற்றி பேசினாலும் எமது மண்ணில் பெண்கள் ஒரு பாரம் என்ற நினைவு. இது பொன்னம்மாவை ஒரு சுமையாக அழுத்தியது. அந்த நிவாரண உதவியுடன் இந்த மூன்று குமருகளையும்... காய்த்துக் குலுங்கும் பனை மரத்தின் நிலைகூட தனக்கு இல்லையே.

அது எப்படி நடக்கும் பொன்னம்மா வாழ்ந்த சமூக அமைப்பு அப்படியானது.

"அம்மா, ஏன் இடிந்து போய் இருக்கிறாய்? நான் இன்றைக்குப் போகவேணும்."

"ஏன் பிள்ளை நேற்றுத்தான் வந்தனி"

"ஓம் அம்மா வவுனியா நிலைமை சரியில்லை சில வேளை தொடர்ந்தும் பிரச்சனை வரலாம்"

"அதுக்காக நீயும் போகப்போறியா"

"அம்மா என்மீது போடப்பட்ட விலங்கை நான் உடைச்சிட்டன் இனி எப்ப போனாலும் என்ன."

கமலி உண்மையில் ஒரு துணிச்சல்காரிதான் தனது ஒரே சொத்தாக இருந்த காதுத் தோட்டை விற்றுக் கொண்டு திடீரென்று காணாமல் போய் விட்டாள். பொன்னம்மா கணவனின் நினைவாக எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியிலும் வைத்துப் பூசித்த சைக்கிளையும் கொண்டு ஓடி விட்டாள்.

பொன்னம்மா உண்மையில் இடிந்து போனாள். ஊருக்கும் உலகத்துக்கும் பயந்தல்ல. கணவனின் நினைவாக இருந்த சயிக்கிளை நினைப்பதா துன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பச் சுமையைத் தாங்க முடியாத தன் மகளை நினைப்பதா, தன்னையும் தன் வளத்தையும் பறித்தெடுத்த இந்தக் கொடிய அரசை நினைப்பதா. கமலிக்கு இங்கு யாருடனும் ஒட்டுறவு கிடையாது. எங்கே போயிருப்பாள்.

அந்தக் கிழிந்துபோன பாயை நகத்தால் கீறிக் கொண்டு நிலத்தைப் பார்த்தபடியே இருக்கிறாள். அவளது கண்களில் இருந்து துளிகள் தானாகச் சொரிகின்றது.

அன்று காலைதான் கமலி சயிக்கிளில் நிறைய மூட்டை முடிச்சுக்களுடன் வந்திருந்தாள். "எடி கமலி.... நீ செய்த வேலை சரியோ? ஏனடி நான் ஒருத்தி இருக்கிறன் என்றநினைப்பு உனக்கு இல்லை."

"ஏன் இல்லாமல், அதுதான் வந்தனான்."

"அல்லாட்டிக்கு வராயோ?"

"குடும்பம் என்று ஒன்று இருக்கும் மட்டும் வரத்தானே வேணும்"

பொன்னம்மாவின் கண்கள் பனித்தன. கமலி ஒரு குடும்பம் நடத்தும் வயதை சொல்லுகிறாள். இது பொன்னம்மாவின் அடைத்திருக்கும் தொண்டையை திறந்து கத்த வேண்டும் போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

"அம்மா ஏன் அழுகிறாய், நான் என்னத்தைச் செய்திட்டன்? அல்லது என்னத்தைச் சொல்லிப் போட்டன்? நாங்கள் பெண்கள்தான், எங்களைச் சுற்றி நாங்களே வேலிபோடுறம் யாரும் எங்களுக்கு வேலி போடேல்ல எங்கட தேவைகளை நாங்கள் நிறைவேற்றுவதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதுவும் எந்தப் பிழையும் இல்ல. நான் பழைய மரபுகளையும் சம்பிரதாயங்களையும் உடைத்திருக்கிறன். ஏன்? நாங்களும் வாழ வேண்டும் நாங்கள் இன்று ஒரு சமூக மாற்றக் காலத்தில் வாழ்கிறம். அதுக்கு ஈடு கொடுக்கவும் வேணும். பசியையும் வறுமையையும் சொல்லி போராட்டத்தை கொச்சைப்படுத்தாமல் போராட்டத்தில் ஒரு அங்கமாக நாங்கள் நிமிர வேணும். அது காலத்தின் தேவை. நான் பெண்தான் அதுக்காக எதுவும் செய்ய முடியாதவள் அல்ல. நான் எடுத்த முடிவு வெறுமன ஒரு குடும்ப சுமையை இறக்க மட்டும்தான் என்று எண்ணாதே. அது நாளைய பெண்கள் விடுதலைக்கு ஒரு அத்திவாரமாகவும் அமையும்."

கமலி தாயைப் பார்க்கிறாள். "ஏனம்மா யோசிக்கிறாய் இத்தனை நாளும் எங்கள் வீட்டில் இல்லைப் பாட்டே பாடினோம். மூன்று முழு நாட்கள் என்னில் நான் நம்பிக்கை வைத்தேன். இதனால் எங்களுக்கு கஷ்ட நிவாரணம் கிடைத்தது. இந்தா"

கமலி ஒரு 50 ரூபாவை எடுத்து தாயிடம் கொடுக்கிறாள். "நல்ல கறியாக வாங்கியா. கன நாளைக்குப் பிறகு ஒரு நல்ல சாப்பாடாக சாப்பிடுவம்."

பொன்னம்மா ஒன்றும் பேசவில்லை. அவள் கண்கள் மட்டும் நீரைச் சொரிந்து கொண்டிருந்தது.

அம்மா... "ஏனணை சும்மா அழுகிறாய். நான் என்ன கெட்டா விட்டன்."

"நேர்மையாக ஒரு சமூக விடிவுக்கு வழிகாட்டினேன். வவுனியா வியாபாரம் ஆண்களுக்கு மட்டும்தானா. அல்லது பெண்கள் அதை செய்யக் கூடாதா?"

கமலி தாயோடு பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட விசையா -

"அக்கா, நானும் ஒரு முடிவுக்கு வந்திட்டன்"

"என்னடி விசையா?"

"நானும் எனது வேலியை உடைக்கப் போறன்."

"என்னடி சொல்லு நீயும் வவுனியாவுக்கு வரப்போறியே!"

நிதானமாக "இல்லையக்கா நெடுநாளாக எனக்கொரு ஆசை அம்மாவின் நிலையும் எமது குடும்ப சுமையும் எனது ஆசையை அடக்கி விட்டது. அந்த ஆசையை நிறை வேற்ற நீ ஒரு வகையில் உதவிதான் செய்திருக்கிறாய்."

"என்னடி சொல்லன்"

"எனது மண்ணையும், மக்களின் வாழ்வையும் சீரழித்தவர்களையும் எதிர்க்கப் போறன்."

"அதுக்கு...."

"நீ எப்படி குடும்ப சுமையை இறக்க விலங்கை ஒடித்தாயோ" அதேபோல எனது மண்ணை மீட்க.." "விஜயா..." தாய் கத்தினாள். கமலி இடைமறித்தாள்.

"சரிதானம்மா, விஜயா சொல்வதும் ஞாயம். நாங்கள் எல்லோரும் ஒரு நோக்கத்துக்காக ஒன்று சேர வேணும் அதுவும் எங்கள் மண்தான் எவ்வளவு கூடுதலான இழப்புக்களைச் சந்தித்தது. மரணம் எப்பொழுதும் வரும்.

இது அவளின் நல்ல முடிவு தான். விஜயா அம்மாவும் நானும் உன்னைக் கூட்டிக் கொண்டு போய் விடுறம். உனது ஆசையை எங்களோடு பகிர்ந்தது நல்லது. சொல்லாமல் ஓடி இருந்தால் என்னாலும் தாங்கேலாதுதான். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சர்வதேச நிகழ்வுகள்

## பாரதூர விளைவுகளுக்கு வித்திடுவன

மதி




சர்வதேச அரசியலில் அண்மைக் காலங்களில் நடைபெறும் நிகழ்வுகளைப் பொதுவாக ஆராய வேண்டி உள்ளது. அந் நிகழ்வுகளில் சில, எதிர் காலத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்த வல்லவையாகவும், எதிர்கால நிகழ்வுகளுக்கு முன்னெடுப்புகளாகவும் உள்ளன. யூகோஸ்லாவிய முன்னைய குடியரசுகளான ஸ்லோவேனிய, குரேஷியா, பொஸ்னியா, கெஸிகோவினு ஆகியவற்றை ஐரோப்பிய சமூக நாடுகளைத் தொடர்ந்து, ஐக்கிய அமெரிக்கா சுதந்திர நாடுகளாக அங்கீகரித்ததைக் குறிப்பிடலாம். இவ்வங்கீகாரம், சர்வதேச அரசியல் உறவுகளிலும், சர்வ தேச மட்டத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல முன்னுதாரணமாக விளங்குகின்றது.

அமெரிக்காவின் அங்கீகாரத்திற்கு விசேட சிறப்புண்டு. தனது நாட்டை பொறுத்த வரை, அமெரிக்காவின் கொள்கை, நடைமுறை அரசியல், சகல தேசிய இனங்களும், இனக் குழுக்களும் தமது தனித்த அடையாளங்களைத் துறந்து ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற தேச ஒற்றுமையுள் தம்மை அமிழ்த்திக் கொள்வதாகும். இக் கொள்கையை "கூழாக்குதல்" என்ற (Melting) வரையறைக்குள் வைக்கலாம். பல்வேறு தேசிய இனங்கள், ஒரு தேச அடையாளங்களை வரித்துக் கொள்ளலாகும். பல்வேறு இனங்களைக் கொண்ட யூகோஸ்லாவியா என்ற நாட்டுக்கு அடிப்படையை இட்டதே அமெரிக்கா எனலாம். 1917 ஆம் ஆண்டில் முதலாம் உலகப் போருக்கு பின்னர், அமெரிக்க ஜனுதிபதி ஆட்ரோ வில்சனுல் (WOODROW WILSON) கூட்டப்பட்ட குழு ஒன்றே யூக்கோஸ்லாவியா தொடர்பான கொள்கையை வகுத்தது. ஒட்டமன், ஹப்ஸ்பேக் சாம்ராட்சியங்களின் சீரழிவுடன் விடுபட்ட ஸ்லோவேனியர், குரோஷியர், சேரியர் ஒரு தேசமாக அமைவர் என எதிர்பார்க்கப்பட்டது. சக்சனியர், பவேரியர், புருஸ்ஷியர் ஆகிய இனங்கள் இணைந்து ஜேர்மனுக அமைந்தது இதற்கு உதாரணமாகக் காட்டப்பட்டது. இப் பரிசோதனை படு தோல்வியில் முடிந்துள்ளது எம் கண் முன்னே காணும் நிகழ்ச்சியாகும். யூக்கோஸ்லாவியா தொடர்பான பரிசோதனையை நடத்திய அமெரிக்கா, தனித் தேசிய இனங்கள் சுதந்திர நாடுகளாக அமைவதை அங்கீகரித்ததானது, வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வு என்பதை மறுக்க முடியாது. வரலாற்றுத் திருப்பம் என்றும் கூற முடியாது. புதிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனங்களை விடுதலை ரீதி யான வரலாற்றுப் போக்கை தடுத்து நிறுத்தியவர்கள், தங் கள் தவறை திருத்திக் கொண் டதாகவே கருத முடியாது. இவ்வாறு தேசிய இன விடு தலையை தடுத்துநிறுத்த முயலும், சேபியர் பெரும்பான் மையை "ஆக்கிரமிப்பாளர்" என்று மேற்குலகம் வர்ணித் துள்ளது இங்கு நோக்கப்படு கின்றது.

சேபியப் பெரும்பான்மையின் முன்னைய யூகோஸ்லாவியா வின் சேபியக் குடியரசு, மொன் ரிக் நிகரோக் குடியரசு, குரோஷியாவினதும், பொஸ் னியா கெஸிகோவினுவினதும் சேபியப் பகுதிகள் ஆகிய வற்றை இணைத்துக் கொண்ட

நாடுகள் சபையின் துருப்புக்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக் கும் நிலையில் தணிந்துள்ளது. அதேவேளை, பொஸ்னியா - கெஸிகோவினாவில் யுத்தம் வெடித்து, பெரும் அழிவுகளு டன் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. ஐ. நா. சபையின் படைகள் முழுவதுமாக அனுப் பப்படாத நிலையில், புதிதாக பொஸ்னியா -கெஸிகோவினா வில் ஏற்பட்ட யுத்தம் ஐ. நா. சபைக்கு சங்கடத்தை ஏற்படுத் தியுள்ளது. இவ்வருடம் பெப்ர வரி மாதம் 19ம் திகதி இஸ் லோவேனியா, குரோஷியா, பொஸ்னியா, கெஸினோவினா ஆகியவை தமது குடியரசுகளில் சர்வஜன வாக்கெடுப்புக்களை நடத்தி தமது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்ததன் அடிப்படையில், இப்பி ரச்சனை உள்நாட்டுப் பிரச்சனை என்ற நிலை யிலிருந்து விடுபட்டு, நாடுகளுக்கிடையில் நடைபெறும் சர்வதேசப் பிரச்சனையாக கருதப் பட்டு, அவற்றிற்கு எதி

லேயே, சேபியாவுக்கு எதிராக ஆயுத, பொருளாதாரத் தடை களை தீவிரமாக அமுல் செய்ய வேண்டும் என்றும், சேபியா வின் விரிவாக்கக் கொள்கை யைக் கண்டித்து ராஜரீக உற வுகளைத் துண்டித்து அந்நியப் படுத்த வேண்டும் என்றும், 51 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய பாதுகாப்புக்கும், கூட்டுறவுக்குமான மகாநாட்டு (Conerence of Security and Cooperation) அமைப்பிலிருந்து சேபியாவை வெளியேற்ற வேண்டும் என்றும் மேற்குலக நாடுகள் ஆலோசித்து வருகின் றன. சமாதான மகாநாடு ஒன்று, ஆரம்பமாகு முன்னர், ஏனைய சுதந்திரக் குடியரசுக ளில் சேபியர் வாழும் பகுதி களை இயலுமான அளவு தனதாக்கிக் கொள்ள சேபியா முயல்கின்றது. இச் செயல் ஆக்கிரமிப்பு எனக் கருதப்படும் நிலையில், சேபியாவினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை விட்டு சேபியா வெளியேற வேண்டும் என்று தீர்மானிப் பது, சமாதான மகாநாட்டில்



நஜிபுல்லா



அகமட் மசூட்



ஷெக் மற்றியார்

சேபிய நாடொன்றை உருவாக் கும் முயற்சியில், அங்கீகரிக்கப் பட்ட புதிய நாடுகளுடன் யுத் தம் புரிந்து கொண்டிருக்கிறது. குரோஷியாவில் சேபியருக்கும், குரோஷியருக்கும் இடையில் நடை பெற்ற யுத்தம், ஐக்கிய

ராக சேபியத் தேசிய இனத் தால் நடத்தப்படும் போர் ஆக் கிரமிப்புப் போராக, ஐரோப்பிய சமூகத்தாலும், ஐக்கிய அமெ ரிக்காவாலும் வர்ணிக்கப்படு வது உலக அரசியலில் முக்கிய முன்னெடுப்பே அன்றி வேறன்று. இவ்வடிப்படையி

மிகச் சிக்கலான விடயமாக இருக்கும். சேபியப் பகுதிகளில் ஆக்கிரமிப்பை ஏற்றுக் கொண்டு, அகண்ட சேபி யாவை உலக சமூகம் அங்கீக ரிக்குமா அல்லது சேபியாவை வெளியேற்றி, சுதந்திர நாடுக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளின் பிரதேச ஒருமைப்பாட்டை காக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆயினும், பேராசிரியர் வில்லியம் பாவ் குறிப்பிடுவது போல், "பல்வேறு இனங்களை உள்ளடக்கி ஒரு தேசத்தை (Ethnic nation) உருவாக்கலாம் என்ற கருத்து அழிவுத் தன்மை கொண்டதாக மட்டுமல்ல, சுய அழிவுத் தன்மை கொண்டதாகவே நிருபிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இனங்களைக் கொண்ட ஒரு தேசத்தில் ஒரு இனம் தனது வாய்ப்புக்களை அதிகரிக்க (Ethnica Avantage) முற்படுமாயின், இனத்தூய்மையையும், மேலான தன்மையையும் நிலைநிறுத்தி ஏற்படும் போராட்டம் சகல இனங்களையும் அத்தேசத்திற்கு எதிராக மாற்றி விடும்." யூகோஸ்லாவியச் சிக்கலில் இன்னொரு விடயத்தையும் அவதானிக்கலாம். ஐ. நா. சபைக்கூடாக அமெரிக்காவும், யூகோஸ்லாவியாவிற்கான ஐரோப்பிய மகாநாடு என்பதற்கூடாக கறிங்ரன் பிரபு தலைமையில் ஐரோப்பிய சமூகமும் , சர்வதேச பொலிஸ்காரனாகக் காணலாம். உலகில் தனிப்பெரும் வல்லரசாக நிலைத்திருக்க அமெரிக்கா விரும்பிய போதிலும், ஐரோப்பிய சமூகத்துடனான போட்டி, முதலாளித்துவங்களுக்கு இடையிலான போட்டி தவிர்க்க முடியாததாகவே உள்ளது. சீன அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட இரகசிய அறிக்கை ஒன்று, முதலாளித்துவப் பலக்குவிப்புக்களுக்கு (Power Blocks) இடையிலான பனிப்போர் தொடருமெனக் கூறியுள்ளது. இதனைச் சமாளிக்கும் நோக்குடனேயே உலகத்தின் தலைவனாக, தனித்துச் செல்லும் போக்கை அமெரிக்கா அடக்கி வாசிக்கின்றது. நட்பு நாடுகளை கூட்டிணைத்து அவற்றிற்கு வழிகாட்டி உலக "சமாதானத்தையும் ஒழுங்கையும்" நிலைநாட்டுவதெனவும், தம்மால் உருவாக்கப்பட்ட ஐ. நா. சபை உலக வங்கி, சர்வதேச நிதியம் போன்ற பல்நாட்டு அமைப்புக்கள் (Multilatenl organisations) ஆகியவற்றை பயன்படுத்துவதெனவும் அண்மையில் அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் அமெரிக்கக் கொள்கையை வெளியரங்கமாக கூறியதும் இங்கு குறிப்பிடத் தக்கது.



இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் நெருங்கிவரும்பல் முகப்பட்ட உறவினையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். இந் நெருக்கத்திற்கு முக்கிய காரணியாக விளங்குவது சீனா. அமெரிக்காவைப் பொறுத்தவரை, சீனா முழுமையாக சந்தைப் பொருளாதாரத்திற்குத் திருப்பவில்லை. எனவே சீனாவின் சந்தை தொடர்ந்தும் அமெரிக்காவின் கைக்கு எட்டாததாகவே உள்ளது. எனவே சோவியத் யூனியனுக்கு அடுத்த படியாக, எஞ்சியுள்ள சோஷலீச நாடுகளின் மேல் அமெரிக்காவின் பார்வை திரும்பியுள்ளது ஆச்சரியம் விளைவிப்பதல்ல. அதிலும் சீனாவின் மேல், உலகின் மிகக் கூடிய சனத்தொகை உள்ள சீனாவின் பொருளாதாரத்தை பல்நாட்டுக் கூட்டுத்தாபனங்களின் பொருட்களைச் சந்தைப்படுத்த திறந்து விடுவதில் அமெரிக்கா அக்கறை காட்டுவதும், அதனை நிறைவேற்ற பலவழிகளில் முனைவதும் எதிர்பார்க்கக் கூடியதே.

அமெரிக்காவின் ஆயுதப்படைத் தளங்களை சவுதிஅரேபியாவிலிருந்து தாய்லாந்து வரை உள்ள பகுதிகளில் அமைத்து தென் ஆசியா, தென்கிழக்காசியாப் பகுதிகளில் மேலாதிக்கம் செலுத்தி, சீனாவை அடிபணிய வைக்க அமெரிக்கா முயல்கின்றது. இத்தளங்கள், தலைமையகங்களையும், கட்டளையகங்களையும், தொலைத் தொடர்பு சாதனங்களையும் (Command, Control, Communication) கொண்டதாக விளங்கும். இந்தியாவுடன் விரைவில் செய்யப்படவிருக்கும் இராணுவ ஒப்பந்தத்தின் மூலம், ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகபட்டினம் துறைமுகத்தில் இத்தகைய அமெரிக்கத் தளம் அமைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாம். இத்தளத்திற்கு அமெரிக்கப் போர்க் கப்பல்கள் மூலம், அணுநீர்மூழ்கிகளும் வந்து போகக் கூடியதாக இருக்கும். இந்தியா, தனது அயல் நாடுகளில் இருந்து, குறிப்பாக பாகிஸ்தானிடமிருந்து வரும் ஆபத்தைச் சமாளிக்க தனது விமானங்களையும், கடற்படைகளையும் அமெரிக்க உதவியுடன் விஸ்தரிக்க எண்ணுகின்றது. F16 விமானங்களையும், சண்டைவிமானங்களை உருவாக்கும் தொழில் நுட்பத்தையும், அணுநீர்மூழ்கிகளையும் அமெரிக்காவிடமிருந்து பெற முயல்கின்றது. இம்முயற்சியில் அமெரிக்காவுடன் இராணுவக் கூட்டுக்கு உடன்பட்டுச் செயல்படுகின்றது. சீனாவுக் கெதிரான அமெரிக்காவின் நோக்கத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த இந்தியா எண்ணுகின்றது. சீனாவுக்கு பிறகு இந்தியாவே அடுத்த இலக்கு என்பது இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பினருக்கும் தெரியாத விடயமல்ல. ஆயினும், நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இந்தியா, தனது இருப்புக்காக எதனையும் செய்ய தயாராக உள்ளது. சீனாவுக்கு தனது படைப்பலத்தைப் பெருக்குவதைத் தவிர வேறு வழியில்லை. அதனைத்தான் மும்முரமாகச் செய்து கொண்டிருக்கின்றது. சீனாவின், இரகசிய உள்ச் சுற்றறிக்கையில் எஞ்சியுள்ள சோஷலிச நாடுகளுக்கு எதிராகப் பனிப்போர் தொடர்வதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க, இந்திய உறவின் இணக்கத்திற்கு இன்னொரு காரணமும் உள்ளது. இஸ்லாமிய அடிப்படை வாதத்தை தமது நாட்டின் கொள்கையாகக் கொண்ட பல நாடுகள் உருவாகி வருவதாகும். அவற்றில் அணுஆயுதம் பரவுவதிலும் பெரும் மிரட்டலாக உள்ளது. இவ் அம்சத்திற்கு மேலும் வலுவூட்டுவதாக ஆப்கானிஸ்தானில் நடைபெறும் நிகழ்வுகள் அமைகின்றன. ஆப்கானிஸ்தான் எந்த நேரத்திலும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தை தமது கொள்கையாகக் கொண்ட கொரில்லா அமைப்புகளிடம் விழுந்துவிடும் நிலைமை காணப்படுகின்றது. அகமட் மதுட் என்பவரின் தலைமையிலான இஸ்லாமிக் சல்சம் என்ற கொரில்லா அமைப்பாகட்டும், குல்புதீன் ஷெக் மற்றியார் தலைமையிலான, கெல்ஸ் இ. இஸ்லாமி என்ற தீவிரவாத இஸ்லாமிய அமைப்பாகட்டும், ஏனைய குட்டி அமைப்புகளாகட்டும் அனைத்தும் ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய அரசை நிறுவுவதிலேயே நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே ஜனாதிபதி நஜிபுல்லா மூலம் நடுநிலைமையும், சோஷலீச எண்ணங்களையும் உடைய நாட்டை நிலைநிறுத்த டெல்லி எடுத்த முயற்ச்சி தோல்வி காணும் நிலையில் உள்ளது. இவ்வாறு ஏற்படுவதை மேற்குலக நாடுகளோ, ஐ. நா. சபையோ, அதன் பிரதிநிதியாக அங்கு செயற்படும் பெனன் செவனே (Benon Sevano) தடுக்கும் நிலையில் இல்லை. மத்திய ஆசியா, மத்திய கிழக்கு, தென்னாபிரிக்காவின் வடபகுதி ஆகியவற்றில் பிறைவடிவில் அமையப் போகும் தொடர்ச்சியான இஸ்லாமிய அரசுகளின் அடிப்படைவாத ரீதியான மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்துவதில் மேற்குலகநாடுகள் குறிப்பாக அமெரிக்கா இந்தியாவுடன் கூட்டுசேர்வது வரலாற்று நியதிக்குட்பட்டதே.

மேற்குலகம் தனது நலனுக்கு உகந்த முறையில் உலகில் "சமாதானத்தையும், ஸ்தரத்தன்மையை, ஒழுங்கையும்" நிலைநாட்டும் முயற்சியில், ஐ. நா. சபையை பயன்படுத்தி வருவது கண்கூடு. இச் செயற்பாட்டில், இன்னொருபடி முன்னேறி, சர்வதேச ஆயுத முரண்பாடுகளைத் தடுத்து, யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்யும் சமாதானப் படையாக நேட்டோப் (NATO) படைகளை அனுப்புவது குறித்து மேற்குலகம் ஆலோசித்து வருகின்றது. நேட்டோ, மேற்குலகின் இராணுவ அமைப்பு என்பது அனைவரும் அறிந்த விடயம். சமாதானத்தை நிலைநிறுத்த அதனைப் பயன்படுத்துவது என்ற கருத்தானது, மேற்குலகத்தின் நலன்களையும் மதிப்பீடுகளையும் (UACUES) உலகில் இராணுவ மேலாதிக்கத்தின் மூலம் வலியுறுத்துவது என்பதாகும். ஐரோப்பிய பாதுகாப்பிற்கும் கூட்டுறவுக்குமான மகாநாடு என்ற 51 நாடுகளைக் கொண்ட மேற்குலக அமைப்பில், ருஷ்யா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளும் உள்ளன. இதனை ஒரு அரசியல் அமைப்பாக, கிழக்கு ஐரோப்பியாவையும் உள்ளடக்கிய பரந்த மேற்குலக அமைப்பாக கட்டி எழுப்புவதே திட்டவகுப்பாளரின் நோக்கமாகும். இது ஒரு சர்வதேச அரசியல் அமைப்பாக கட்டிவளர்க்கப்படுமாயின், இதனது இராணுவக் கருவியாக நேட்டோ அமைப்பைச் செயல்படுத்தி, உலகில் "சமாதானத்தை நிலைநிறுத்துவதே" (Peace Keeping) இத்திட்டத்தின் உள் அர்த்தமாகும். ■

## சிந்தனைக்கு

**விழிமின்! எழுமின்! இல்லையேல்,**

**என்றும் வீழ்ச்சி உறுமின்.**

**- ஜான் மில்ட்டன் -**

தமிழ்த் தேசிய

www.tamilarangam.net

வாசகர் கடிதப் பகுதி



# அக்கரைப்பூக்கள்

அன்புடன் ஆசிரியருக்கு!

இவ்வாண்டின் "எரிமலை" இதழ்கள் இரண்டினை முதன் முதலாக வாசித்தேன். "எரிமலையை" இவ்வளவு தாமதமாக அறிகிறோமே என எண்ணும்போது கவலை கொள்கின்றேன். எரிமலையின் ஏற்ற வளர்ச்சிக்கு எனது நல்லாசிகள்.

அன்புடன்
ஜெகதீஸ்வரி இராஜரட்னம்.
ஜேர்மனி.

✡

ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்!

எமது இனத்தின் விடிவிற்காய் எழுத்துப் படையல்மூலம் எழுச்சிமிகு அரிய கருத்துக்களை அள்ளித்தரும் "எரிமலை" யை மாதம்தோறும் படித்துப் பயன்பெற்றும் வருகிறேன். பல்வகை அம்சங்கள், படிக்கத்தூண்டும் எழுத்துநடை.

உண்மையுள்ள
க. ரவீந்திரன்.
பிரான்ஸ்.

✡

மதிப்பிற்குரிய "எரிமலை" ஆசிரியர் அவர்கட்கு!

எந்தவொரு போராட்டத்திற்கும் பத்திரிகைத் துறையினரின் பங்களிப்பு மிக முக்கியமானது. இப்பங்களிப்பு போராட்டம் நடைபெறும் தளத்திலாகவும் இருக்கலாம்; அல்லது அப்போராட்டத்தோடு சம்பந்தப்பட்ட சமூகம் வாழும் பிற நாடுகளிலாகவும் இருக்கலாம். அந்த வகையில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வாழும் எம் தமிழ் மக்களை தமிழீழப் போராட்டத்துடன் மனோவியல் ரீதியாக இணைத்து வைத்திருக்கும் பெருமை "எரிமலை" போன்ற பத்திரிகைகளையே சாரும். எரிமலையை கடந்த சில காலங்களாக படித்துவருகின்றேன். எரிமலையின் ஒவ்வொரு பக்கமும் தமிழீழ விடுதலையின் உறுதியை எடுத்தியம்புவனவாக உள்ளன. எரிமலையின் சேவை தொடர எனது வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்
S. சிவனேஸ்வரன்
கனடா.

✡

மதிப்பிற்குரிய "எரிமலை" ஆசிரியர் குழுவிற்கு வணக்கம்!

இழப்புக்களையும், ஏமாற்றங்களையும் அன்றும், இன்றும் சுமந்து கொண்டிருக்கும் எமது மக்களின் அவலங்களையும், நிர்க்கதியான வாழ்க்கையையும், கலை, கலாச்சார ஆக்கங்களையும் "எரிமலை" விரிவாய் விளக்கமாய் நமக்கு உணர்த்துகின்றது.
"எரிமலை" ஏடு, நல்ல ஒரு மாத சஞ்சிகை என எல்லோரின் வாழ்த்துக்களையும் பெறவேண்டும். எல்லா மக்களும் நம் நாட்டின் இன்னல்களை நன்கு புரியவேண்டும்.

எரிமலை விரும்பி
க. சோபா.
ஜேர்மனி.

✡

உங்களுக்கு,

எரிமலை இதழுக்கு வரும், கடிதங்கள், ஆக்கங்கள் என்பன எமக்கு ஊக்கம் தருவதாய் அமைகின்றன. ஆசிரியர் குழுவின் முடிவுகளுக்கமைய வெளியிடப்படாமல் விடப்படும் ஆக்கங்களின் சொந்தக்காரர், மனந்தளராத முயற்சியை தொடரவேண்டும் என்பதே எமது விருப்பு. உங்களிடமிருந்து ஆக்கங்களை தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர் குழு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலி



ஆழப்பதியும்
கூரிய நகங்கள்.
தூர நோக்கும்
விஞ்ஞானப் பார்வை.
புதிய உலகின்
உருவாக்கமே
இதனுள்
விரிகிறது.

சுற்றிப்
படர்ந்து
எட்டிப் பாயும் ஆதிக்கப் பூதத்தை
வெட்டிச்
சாய்க்கும்
மனிதவலுவின்
புதிய சின்னம்
புலி.

ஏகாதிபத்தியம்
நாற்றமெடுத்த
உலக வடிவமாய்
உருவாக்கமாகையில்

நீ
உயர்ந்து
உன்
கூரிய நகங்கள்
அதனை
குத்திக்கிழித்து
ஆர்ப்பரித்து
அமைதியடைய
உன்
கூரிய
விஞ்ஞானப் பார்வை நகரட்டும்.

மனித வலுவின்
சின்னம் நீ.

**இளங்கோ**




# வீரத்தாய்

திருக்கோணமலை மாவட்டம் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த திருமதி. செல்லம்மா கந்தசாமி, பதினேழு வயது நிரம்பிய தமது மகளொருவரை போராட்டத்திற்கென விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் ஒப்படைத்தார். யாழ்ப்பாணத்திலுள்ள மகளிர் முன்னணி அலுவலகத்தில் தமது மகளை ஒப்படைத்த இந்தத் தாயின் மற்றெரு புதல்வரான ரவி விடுதலைப்புலிகள் இயக்கத்தில் போராளியாக உள்ளார். இவரின் கணவரான திரு. கந்தசாமி 1989-ம் ஆண்டில் ஈ.பி.ஆர்.எல்.எப்(f) இயக்கத்தினரால் திருகோணமலையில் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக்குடும்பத்தினர் தற்போது இடம் பெயர்ந்து நாவற்குழியில் வசித்து வருகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# இயற்கையும் மனிதனும்

கட்டுரைத் தொடர் - 4

ஆக்கம்: சங்கர்



சதையைச் சுற்றி ஓடு உள்ள உயிரினங்களின் நிலையிலிருந்து முதுகெலும்புள்ள உயிரினங்கள் தோற்றம் பெறுவதற்கு பல கோடி வருடங்கள் எடுத்தன. ஆனால் ஓடு உள்ள உயிரினங்கள் நாம் இன்று காணும் சிப்பி ஊரி போன்று உருவத்தில் சிறிதாக இல்லாமல் மிகவும் பெரியன வாயிருந்துள்ளன. இவற்றிற்கான ஆதாரங்களை முன்னர் கடலினுள் தோன்றிய எரிமலைகளுக்குள் அகப்பட்டு எரிந்துபோனவற்றிலிருந்து சமுத்திரவியலாளர்களும், அகழ்வாராய்ச்சியாளர்களும் கண்டுபிடித்துள்ளனர். இதேவேளை அவை மிகவும் பிரமாண்டமான அளவில் பெருகியிருந்தன. பலகோடி வருடங்களுக்கு முன்னர் கடலுள் மூழ்கியிருந்த சீனாவின் மத்திய பகுதிகளின் பல கிலோமீட்டர் நீளத்திற்கு சுமார் 30 -60 அடி உயரமுள்ள சுண்ணாம்பு மலைகள் உள்ளன. இவற்றை நன்கு ஆராய்ந்த போது இவை பல கோடி வருடங்களுக்கு முன் பெரியளவில் குவிந்திருந்து இறந்துபோன சிப்பி ஊரிபோன்றவற்றின் ஏட்டுக் குவியல்கள் தான் எனக் கண்டுபிடித்துள்ளனர். ஓடு உள்ள உயிரினங்கள் தோன்றி சுமார் 57 கோடி ஆண்டுகள் என்றும், இதன் பின்னர் முதுகெலும்புள்ள மீனினங்கள் தோன்ற சுமார் 50 கோடி ஆண்டுகள் ஆகியுள்ளன என்றும் ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

முதுகெலும்புள்ள உயிரினங்களின் தோற்றமானது விரைவான அசைவுநிலையையும் (நீரில்) அதே நேரத்தில் நீரில் உள்ள ஒட்சிசனை உட்கொண்டு வாழ்ந்த உயிரினங்கள் நீரிலிருந்து வளிமண்டலத்தில் உள்ள ஒட்சிசனை உட்கொண்டு உயிர் வாழப் பழகின. இவ்வாறு நீரிலும் வளியிலும் உள்ள உள்ள ஒட்சிசனை உட்கொண்டு உயிர் வாழப் பழகிய உயிரினங்களே, நீரிலிருந்து நிலத்திற்கு இடம் பெயர்ந்தன. இவை பின்னர் பூமியில் முற்றாக வாழும் நிலைக்கு வந்தன. இதே போன்று தான் தாவரங்களும் நீரிலிருந்து திலத்திற்கு இடம் மாறின.

## நகரும் கண்டங்கள்

கொண்டுவானாவில் இருந்து பிரிந்த நிலப்பரப்பின் இன்றைய இந்திய உபகண்டமும் ஒரு பகுதியாகும். இவ்வாறு பிரிந்த இந்திய உபகண்டம் யூரேசியாவுடன் இணைந்து சுமார் இரண்டரை கோடி வருடங்கள் எடுத்தன. இத்தகைய இணைவுகள் பூரணமாக பூகோளவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இன்றுள்ள இந்திய உபகண்டத்தின் மேற்பரப்பானது முன்னர் கடல்மட்டத்திலிருந்து சுமார் 2000 மீட்டர் ஆளத்தில் இருந்துள்ளது. இந்தியாவின் ஒரு பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரத்தில் கடலில் வாழ்ந்து எரிமலையின் குழம்பில் கருகிப் போன சிற்பி, நத்தை போன்றவற்றின் சிதைவுகளையும், சுமார் 30 C.M ரிலும் பெரிய ஊரிகளின் சிதைவையும் கண்டுள்ளனர். இக்கருகிய கற்கள், முதலில் அப்பிரதேச மக்களால் ஓர் அபூர்வமான அதிஸ்டமாகத்தான் கருதப்பட்டது. ■

(தொடரும்)...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோல்வியை நோக்கி...

## ஒரு கண்ணோட்டம்

சடையர்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு யுத்தத்தின் பின்னர், 1991 ஐப்பசி மாதம் பெரும் யுத்த ஆயத்தங்களுடன் தீவுப்பகுதிகளிலும், பூநகரிப் பகுதியிலும் சிறீலங்காப் படையினர் தரை இறங்கியதிலிருந்து குடாநாடு மீதான பாரிய, கடுமையான இராணுவ நடவடிக்கை குறித்து பேசப்பட்டது. பிரச்சாரச் சாதனங்கள் வாயிலாகவும், உலங்கு வானூர்திகளிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசியும் தமது திட்டம் குறித்து தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை சிங்கள அரசு மேற்கொண்டது.

### பிரச்சார யுத்தம்

இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு முன்னோடியாக தமிழ் மக்கள் மீது பிரச்சார யுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மக்களையும் விடுதலைப் புலிகளையும் மனோவியல் ரீதியாக தோற்கடிக்க இப்பிரச்சார யுத்த தந்திரம் கையாளப்பட்டது. இதன் மூலம் மக்கள், புலிகள் மத்தியில் ஒருவிதமான பீதியை உருவாக்கி அவர்களது உறுதியான நிலைப்பாட்டில் பின்னடைவை ஏற்படுத்துவதே நோக்கமாக இருந்தது.

### புதிய யுத்த தந்திரோபாயம்

யாழ் குடாநாட்டுள் எக்கணமும் எதிரி நுழையலாம் என்ற நிலையில், வடக்கு-கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள் இராணுவ தரப்பில் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. காவலரண்கள், ரோந்து அணிகள் விடுதலைப் புலிகளின் மின்னல்வேகத் தாக்குதலால் நிர்மூலமாக்கப்பட்டன. தாக்கி அழிக்கப்படுகின்றன. சங்கிலித் தொடர்போன்ற தொடர் தாக்குதல்கள்; விடுதலைப்புலிகளின் போர்முறைத் தந்திரோபாயங்கள் குறித்து மீள் மதிப்பீடு ஒன்றின் அவசியத்தை இராணுவத் தலைமைக்கு உணர்த்தியது. அதேபோன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, செயற்பாட்டுக்குத் தயார்நிலையில் உள்ள தமது போர்முறைத் திட்டத்தை பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கும் அது தள்ளப்பட்டது.

ஆனையிறவு யுத்தத்தின் பின்னர் விடுதலைப் புலிகள் வகுத்துக்கொண்ட புதிய போர்முறைத் தந்திரோபாயங்கள், படையினரின் இராணுவ முன்னெடுப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாகவும், அவர்களின் நகர்வுகளை கட்டுப்படுத்துவதாயும் அமைந்தன. விடுதலைப் புலிகள் மரபு யுத்தத்தையா? அல்லது கரந்தடி முறையையா? அன்றி இடம், காலம் என்பவற்றிற்கு ஏற்ற வகையில் இரண்டையும் கலந்த போர்முறையிலா?! மேற்கொள்கின்றார்கள் என்ற குழப்பத்திற்கு உயர்பீடம் உள்ளது.

### "வன்னி விக்ரம 3"

விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கை என்று கூறிக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட "வன்னி விக்ரம 3" நடவடிக்கை சுமார் ஒரு வாரம் தொடர்ந்தது.

மாசி மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கை; சில கவச வாகனங்கள் இழப்புடனும், சில உயிர் இழப்புக்களுடனும் பங்குனி முதல் வாரம் நிறுத்தப்பட்டது.

இராணுவம், தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் கிழக்கில் கூட, இராணுவ அணிகளை முழுமையாக அழித்துவிடும் சக்தி பெற்று விடுதலைப் புலிகள் விளங்குவது இராணுவ தரப்பில் பெரும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அச்சத்தையே ஏற்படுத்தியுள்ளது. இச்சூழ்நிலையில்; தமது அழிவுகளைக் கட்டுப்படுத்த புதிய திட்டங்களை, அணுகுமுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்த இராணுவம்; அதற்கொரு பரீட்சைக் களமாகவே "வன்னி விக்ரம 3"ஐப் பயன்படுத்தியது எனக் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் தந்திரோபாயங்களையும், தாக்குதல் முறைகளையும் உரசிப்பார்க்கும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டதே "வன்னி விக்ரம 3" நடவடிக்கையாகும். "வன்னி விக்கிரம 3" நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் என்ன செய்தார்கள் என்பதையும் எப்படித் தாக்குகிறார்கள் என்பதையும் பார்வையிட்டோம் என்று வடபகுதிஇராணுவத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவ குறிப்பிட்டதில் இருந்து, விடுதலைப்புலிகளின் தந்திரோபாயங்கள் குறித்து அறிந்து கொள்ளும் தேவையையும் ஆவலையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

"வன்னி விக்ரம 3" இன் பட்டறிவில் இருந்து, இராணுவத்தினர் புதிய தந்திரோபாயங்களை வகுத்திருப்பர் எனவும் அறியமுடிகின்றது. இராணுவ பாதுகாப்பு எல்லைக்கோடு ஒன்றை வைத்துக்கொள்வதுடன், இராணுவத்தை எப்பொழுதும் தயார் நிலையில் வைத்திருத்தல் என்பதே இராணுவத்தினரின் புதிய பிரதான யுக்தியாக வகுக்கப்பட்டுள்ளது என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



**மணலாற்று யுத்தத்தில், விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட தாங்கி எதிர்ப்புப் பீரங்கி.**

106மி.மீ எம்.40 பின்னுதைப்பற்ற பீரங்கிகள், 32 இற்கு மேற்பட்ட நாடுகளில் பிரதான தாங்கி எதிர்ப்பு ஆயுதமாக உபயோகிக்கப்படுகிறது. அமெரிக்கத் தயாரிப்பான இந்த ஆயுதம் இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான், ஜப்பான், பிரேசில் ஸ்பெயின் முதலிய நாடுகளில் உபயோகத்தில் உள்ளன.
இந்த பீரங்கியால் ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள டாங்கிகளைக்கூட தகர்க்க முடியும்.
இந்தப் பீரங்கியின் நீளம் 3.4 மீற்றர். இதனுடைய நிறை 209.5கிலோ. இதன் மூலம் நிமிடத்திற்கு ஒரு குண்டைச் சுடலாம். மோட்டார் எறிகணைபோல் பயன்படுத்தும் போது ஏழு கிலோ மீற்றருக்கும் கூடுதலான தூரத்திற்கு இதன் குண்டுகள் பாயக்கூடியவை.
இவற்றில் மூன்றுவகையான வெடிகுண்டுகளை உபயோகிக்கலாம்.
டாங்கி எதிர்ப்பு உயர்சக்தி வெடிமருந்தைக் கொண்ட வெடிகுண்டு(HEAT).
பிளாஸ்ரிக் உயர் சக்தி வெடிமருந்தையும் பாதைச்சுட்டியையும் (TRACER) கொண்ட வெடிமருந்து.
துருப்பு எதிர்ப்பு வெடிகுண்டு
இந்த பீரங்கியுடன் 50 கலிபர் துப்பாக்கி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இலக்குவைக்கப்பட்டபின் பீரங்கிக் குண்டுகள் சுடப்படும்.

## மணலாற்று யுத்தம்

"வன்னி விக்ரம 3" இல் தாம் கற்றுணர்ந்த யுத்த நுண்ணறிவிற்கு ஏற்ப புதிய திட்டங்களை வகுத்துக்கொண்டு புறப்பட்ட இராணுவ அணிகள் முதல் நாளிலேயே பெரும் இழப்பைச் சந்தித்தது. 3000 இராணுவத்தினர், சீன இராணுவ டாங்கிகள் சகிதம், விமானப்படையின் நவீன விமானங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட "அயே பஹர" இராணுவ நடவடிக்கை படுதோல்வியில் முடிந்தது. முதல்நாள் உக்கிர மோதலிலேயே 26 இராணுவத்தினர் கொல்லப்பட்டு 3 கவச வாகனங்கள் அழிக்கப்பட்டன. டாங்கி எதிர்ப்பு பீரங்கி ஒன்றையும் (முதல்தடவை) முதல் நாள் சண்டையிலேயே விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

மணலாறு, கொக்குத்தொடுவாய் பகுதிகளில் கடும் குண்டுவீச்சுக்கு மத்தியில் நின்று விடுதலைப்புலிகள் மூர்க்கமாகப் போரிட்டனர்.

இதனை "மிக மூர்க்கத்தனமான போர்" என வர்ணித்த வடபகுதி இராணுவத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவ, "விடுதலைப் புலிகள் ராக்கெட்டுக்கள், மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்களை எம்மீது பொழிகின்றார்கள்" என்று விபரித்தார். இதில் இருந்து விடுதலைப் புலிகளின் தாக்குதலின் கடுமையைப் எளிதாய்ப் புரிந்துகொள்ளலாம்.

தமது இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளின் முகாம்கள் பலவற்றை பிடித்துவிட்டோம் என நாளும் அறிக்கைகள் விட்டபடி கூட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுப்படைத் தலைமையகம் தன் பணியை ஆற்றி வந்த போதும் களத்து நிலை மிகவும் மாறுபட்டதாகவே இருந்தது என்பதை தொடர்ந்த செயற்பாடுகள் வெளிக்காட்டின.

## தோல்வியின் வெளிப்பாடுகள்.

கிழக்கிலும்-வடக்கிலும் தொடரும் இராணுவத் தோல்விகள் குறித்து கூட்டுப்படைத் தலைமயகம் வெளிப்படையாக ஒத்துக்கொள்ள முன்வருவதில்லை என்றாலும், படையினரின் நிலை குறித்து வெளியிடும் விளக்கங்கள் அதனை வெளிப்படுத்தப் போதுமானதாய் அமைகின்றன. விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் அதிரடி நடவடிக்கைகளுக்கு படையினர் ஈடுகொடுக்க முடியாமைக்கு படையினரின் குறைந்தளவு பயிற்ச்சியே காரணம் என இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா தெரிவித்தார். 1992ம் ஆண்டு விடுதலைப் புலிகளை வெல்வதாக இருந்தால், அவர்களைப் போன்று ஒழுக்கம், உறுதிதளராத போராட்டம் என்பன படையினருக்கு இன்றியமையாதது எனவும், இல்லையேல் அவர்களை வெல்ல முடியாதெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

பத்திரிகைப் பேட்டியொன்றில், கூட்டுப்படைத் தலைமைத் தளபதி கமில்டன் வனசிங்கா இப்படித் தெரிவித்தார் "விடுதலைப் புலிகள் உலகிலேயே தலைசிறந்த விடுதலை இயக்கம்; அதன் தலைவர் பிரபாகரன் ஓர் ஆளுமை மிக்க தலைவர்." எனக் குறிப்பிட்டார்.

பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது என்பதில் நம்பிக்கை கொண்டவர்களாகவே இராணுவ உயர் பீடத்தின் ஒரு பகுதியினர் இருப்பது அண்மைக்கால வெளிப்பாடாகும்.

அரசியல் மற்றும் பிற வேறுபாடுகளை மக்கள் மறந்துவிட வேண்டும். நிரந்தரத் தீர்வுக்கான இணைந்த முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மக்கள் தமது தலைவர்களை வற்புறுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## குழப்பம்

குடாநாடு மீது ஒரு பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்வதன் மூலம் விடுதலைப் புலிகளின் பலத்தை மட்டுப்படுத்தி, ஒருவழிக்குக் கொண்டுவந்து விடலாம் என இராணுவத்தினரின் ஒரு பகுதியினர் வலியுறுத்துகின்ற போதும்; ஏற்படும் பின்விளைவுகள் குறித்து பெரும் பகுதியினர் அத்திட்டத்தை நிராகரிக்கவே செய்கின்றனர்.

## நெருக்கடி நிலையிலும் சோர்வுறாத தமிழீழத்து விவசாயி

களத்திலே சூட்டுக்குவியல் மலையாகக் குவிந்து கிடக்கின்றது. முறுக்கேறிய வன்னிக் காளைகள் மூன்று சோடிகள் ஏரிகளை சிலுப்பிக் கொண்டு சூட்டடிப்பிற்கான மர உருளைப் பொறிகளை இழுத்துக் கொண்டு சூட்டுக் குவியலை வலம் வருகின்றன. மலையாகக் குவிந்து கிடந்த சூட்டுக் குவியல் மெல்ல மெல்லக் கரைகின்றது. மாடுகளின் காலடிகளில் மிதிபட்டும் உருளைப் பொறிகளால் அழுத்தப்பட்டும், உருளையின் வெட்டுச் சில்லுகளால் கிளறுப்பட்டும் சூட்டடிப்பு முழு அளவில் இயக்கம் பெற்று விடுகின்றது.

வேலையாட்கள் சுறுசுறுப்புடன் கம்புகளால் சூட்டைக் கிளறிக் கொடுத்து உருளையினது அழுத்தத்தை செம்மைப்படுத்தும் பணியில் இறங்கி விடுகிறார்கள் "பொலி" "பொலி" என அவர்கள் எழுப்பும் குரலும் மாடுகளை அதட்டி விரட்டும் ஓட்டுனர்களின் குரலும் இணைந்து களைத்து மேட்டில் பெரும் ஆரவாரத்தையே ஏற்படுத்திவிடுகின்றது. உழவு இயந்திரத்தால் சூட்டடிக்கும் பொழுது காணக்கூடிய இயக்கம் போன்ற, ஒரு துரித இயக்கம், அந்தக்களத்து மேட்டில் களைகட்டி விடுகின்றது.

நன்றி: ஆதாரம் (தமிழீழ ஆய்வு நிறுவனம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போரை வலியுறுத்தி தம்மை மோதவிடும் அரசு, இறுதியில் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்ற நிலைக்கு வருவதும் இராணுவத்தின் மத்தியில் குழப்பத்தையும் அதிருப்தியையும் தோற்றுவிக்கின்றது. தமது இழப்பை அர்த்தமற்றதாகக் கருதும் படையினர் யுத்த முனையில் பின்வாங்கவே செய்கின்றனர். வடக்கு-கிழக்குக்கு இடமாற்றம் செய்யப்படும் படையினர் தலைமறைவாகி வருவது ஸ்ரீலங்கா அரசிற்கு நம்பிக்கையற்ற தன்மையையே ஏற்படுத்துகின்றது. இதுவரை 3000 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தலைமறைவாகியிருக்கின்றார்கள் என அரசு வெளிப்படையாக ஒத்துக்கொள்கின்றது. இத்தொகையில் யுத்தக்களத்தில் இறந்து, அரசால் மறைக்கப்பட்ட இராணுவத்தினரும் அடங்குகின்றனர் எனவும் சொல்லப்படுகின்றது.

### மாற்றங்கள்- புது வியூகம்

இந்நிலையில் வடக்கு-கிழக்கு யுத்தத்தை நெறிப்படுத்தி வந்த கூட்டுப்படைத் தலைமையக பொறுப்பு திடீரென பறிக்கப்பட்டு, முப்படையினருக்கும் சுயமாக செயற்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைப் படையினரின் வெற்றியின் பெறுபேறு என யாராலும் கருதமுடியவில்லை. களத்து நிலைமைகளை கவனத்தில் எடுக்காது, கொழும்பில் இருந்தபடி; உத்தரவுகளையும் அறிக்கைகளையும் விடும் கூட்டுப்படைத் தலைமையின் உத்தரவுகளுக்கு பணியாத படையினரின் தொடர் புறக்கணிப்பின் விளைவு இதுவாகக் கொள்ளப்படுகின்றது. தேவைக்கும் அரசியலுக்கும் ஏற்ப தமது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முப்படைத் தளபதிகளுக்கும் வழங்கப்பட்ட இவ் உத்தரவானது, கூட்டு நடவடிக்கையிலும் மோசமான குழப்ப விளைவுகளையே மேலும் தோற்றுவிக்கும் என ஒர சாரார் கருத்துத் தெரிவிக்கின்ற போதும்; முன்னிலும் மோசமான இனப்படுகொலைகளுக்கு அங்கீகாரமாக இதைக் கருதமுடியும் எனவும் அவதானிகள் கருதுகின்றனர்.

எது எப்படியிருப்பினும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் யுத்த தந்திரோபாய நடவடிக்கைகளுக்கு ஏற்ப, நுட்பமாக தமது போர் வியூகங்களை வகுத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்ற விடுதலைப் புலிகளை ஸ்ரீலங்கா இராணுவம் எந்தவகையில் எதிர் கொள்ளும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ■

# வயல் விழா

பொருளாதாரம் சிறக்கவும் அதன் மூலம் மக்களின் வாழ்க்கை வசதிகள் மேம்பாடு அடையவும் விவசாயம் பெருக வேண்டும். விவசாயம் பெருகுவதற்கு உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துவதோடு போர்க்காலச் சுழலுக்கு ஏற்ப புதிய மாற்றீடுகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழீழஆய்வு நிறுவனம் புதிய பயிர்களை அறிமுகப்படுத்தி குறைந்த செலவில் குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் பெறுவதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு, அவ் ஆய்வுகளின் பெறுபேறை பயிர்ச் செய்கையாளர்கள் , அத் துறையில் ஆர்வமுள்ளோர், விவசாய ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்க அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து "வயல் விழா" என்னும் நிகழ்ச்சி மூலம் தமது ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதுடன் பிரச்சனைகளுக்கான தீர்வுகளையும் முன்வைத்து செயற்பட்டு வருகின்றனர்.


இதன் மூலம் தற்போது, எண்ணெய், சிறு தானிய விதைகள் என்பன பரீட்சிக்கப்படுகின்றன. ஸ்பெயின் நாட்டு சூரியகாந்தியும் "ஹஷீரா" இனத்தைச் சேர்ந்த ஆமணக்கும், எண்ணெய் வகைகளுக்காக பரீட்சிக்கப் படுகின்றன.

இதே வேளை கம்பு, ஐ. எஸ். 2941 இன இறுங்கு, பத்ரா இன சோளம், மற்றும் கோ-10, கே. எம்-1, பி. எஸ்-20, இனங்களைச் சேர்ந்த குரக்கன் மற்றும், தினை, சாமை, பனஞ்சாமை, வரகு, குதிரைவால் பயிற்றை போன்ற இனங்கள் பயிரிடப்பட்டு பரீட்சிக்கப்பட்டு ஒவ்வொரு பிரதேசங்களிலும் "வயல் விழாக்கள்" மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழத்தில் கம்பனுக்குப் பெருவிழா



கம்பன்விழா கவியரங்கு என்றாலே...
இங்கு நெரிசல் இருக்கும். கவிகேட்க...
எங்கெங்கோ இருந்து எப்படியும் வருவார்கள்
ஆ தின்னத் தின்னச் சலிக்காது என்றறிந்து
பா தின்னத் தின்ன பலபேர் வருவார்கள்
சா தின்னத் தின்னச் சமர்களத்தில் எதிரியுடன்
பூ சின்னச் சின்ன பூவெல்லாம் போராடும்
தீ வண்ண வண்ணச் சிவப்பாகும் காலத்தில்
கம்பன் விழா கவியரங்கைத் தொடங்குதற்கு
எங்கிருந்து நானும் எதுகை எடுத்திடுவேன்?
எதுகை எடுப்பதென்று எனக்குத் தெரிகிறது
அதுகை எடுப்பதற்கு ஆர் வருவீர்; ஆம் இன்று
எதுகையில் எடுப்பதென்றால்... ஏ.கே, எல்.எம்.ஜீ.,
புதுமினிமி, ஆர்.பி.ஜீ., போட்டி எம்.எம். பிஸ்ரல்
எதுகையில் எடுப்பதென்று எனக்கும் தெரிகிறது
அதுகையில் எடுப்பதற்கு ஆர்வருவீர் எங்களுடன்?

தமிழீழத்தில் நடைபெற்ற கம்பன் விழா கவியரங்கத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் யதார்த்தக் கவிதையிது.

இன்று தமிழீழம் முழுமையும் யுத்த மேகங்கள் கவிந்திருக்கின்றது. எங்கும் எதிலும் பயம், பீதி, அவலம், இழப்புக்கள் என மக்கள் அல்லலுற்று ஆற்றொணாது ஆவதியுறுகின்றனர். இருந்தும் இவர்கள் மனந்தளர்ந்து, உடல்சோர்ந்து ஏங்கி நிற்கவில்லை. வாழ்க்கை இருண்டதென்று சோம்பிக் கிடக்கவில்லை. விமானத்தில் இருந்து பொழிகின்ற குண்டு மழைகளுக்கு மத்தியிலும் , வீடுகளின் கூரைகளை முத்தமிட்டுச் செல்கின்ற ஷெல்களின் மத்தியிலும், பொருளாதாரத் தடை, உணவுத் தடை மத்தியிலும் "இது எங்கள் தேசம்"எனக் கூறி நிமிர்ந்து நிற்கிறார்கள்.

காலத்துக்குக் காலம் தமிழ் விழா, தமிழ் மாநாடு, தமிழ் ஆராச்சி மாநாடு என்று பல விழாக்களையும் மநாடுகளையும் கண்டுகளித்த பெருமை யாழ்ப்பாணத்திற்கு உண்டு.

அந்த வரிசையில் அரசியல், பொருளாதார சமூக நெருக்கடிகள் பல சூழ்ந்த இந்தக் காலகட்டத்தில் தமிழ் மீது கொண்ட ஆத்மார்த்தமான பற்றினால் அகில இலங்கைக் கம்பன் கழகம் ஏற்பாடு செய்த "கம்பன் விழா" அண்மையில் நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பேச்சுக்கள், கவியரங்கம், ஆய்வரங்கம், பட்டிமன்றம், மேன்முறையீட்டு வழக்காடு மன்றம் என்பன இடம் பெற்றதுடன் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர்.




எங்கள்
தோட்டத்து மலர்களுக்கு வானம் பொழிவதில்லை.

ஈரம்;
அவர்களது கண்களிலும்
நின்றுபோகாமல் அடித்துக் கொண்டிருக்கும்
இதயத்திலும் மாத்திரம்தான்.
வயிற்றில் இல்லை!

வழமைபோல்;
மண்ணிலே கூட்டாஞ்சோறாக்கி
கூடியிருந்து
சுவைத்து உண்பதுபோல் அபிநயித்து
அன்றைய பொழுதை ஏக்கத்தில் கரைப்பார்கள்.

நாளையும்
இந்த வானம் பொய்க்கக்கூடும்.
ஆனால்
இந்த மணல்பரப்பில்
அவர்கள் கூடியிருந்து
கூட்டாஞ்சோறு ஆக்கி உண்பார்கள்
வலுவின்றிப் பொழுதைக் கழிப்பார்கள்.

நாளை மறுதினமும்
இரக்கமற்ற வானம் இப்படியே இருக்கக்கூடும்.
ஆனால்
நீங்கள்....

ஜெயா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்